பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 29 சனிக்கிழமை (11.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :76







சென்னைக்கு தெற்கே 665 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தனுஷ்கோடி கடற்கரையில் நேற்று வந்திறங்கிய ஈழத்தமிழ் அகதிகளை முதற் படத்தில் காணலாம். அகதிகளின் விவரங்களைப் பொலீஸார் பதிவுசெய்வதையும் மண்டபம் அகதி முகாமில் காவல் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரையும் படங்களில் காணலாம். (ஐ)

# சந்திரிகா - மஹிந்த பனிப்போர் உச்சம்!

## நான்கு மணிநேரப் பேச்சு நல்லிணக்கமின்றி முடிவு

கொழும்பு,பெப்ரவரி 11

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களைத் தீர்மானிக்கும் விவகாரத்தினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விற்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்குமிடையில் நிலவிவந்த பனிப்போர் தீவிரமடைந்து உச்சக்கட்டத்தை எட்டியிருக்கிறது.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையே இது தொடர்பாக இடம்பெற்ற நான்கு மணிநேரப் பேச்சுகள் சூடான வாதப்பிரதிவாதங்கள், வார்த்தைப் பிரயோகங்களோடு நல்லிணக்கமின்றி முடிவடைந்திருக்கின்றன.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பொறுப்பையும், வேட்பாளர்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தையும் கட்சித் தலைவியான தம்மிடமே விட்டுவிடும்படி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி மஹிந்தவிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார் எனக் கூறப்படுகிறது.

ஆனாலும், ஜனாதிபதி மஹிந்த இதற்கு உடன்பாட்டைத் தெரிவிக்கவில்லையென்றும்,

(16ஆம் பக்கம் பார்க்க)

# அரச பேச்சுக் குழுவிலிருந்து விலகினார் பாயிஸ் முஸ்தபா!

கொழும்பு, பெப்.11

விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுகளில் அரசாங்கத் தரப்புக் குழுவில் முஸ்லிம்களின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா அந்தப் பொறுப்பிலிருந்து திடீரென விலகிக்கொண்டார்.

பாயிஸ் முஸ்தபா அரச குழுவில் இடம்பெறுவதை ஸ்ரீ லங்காமுஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) ஆகிய கட்சிகள் ஆட்சேபித்ததையடுத்து மேற்படி விலகல் இடம்பெற்றுள்ளது.

அரச குழுவில் இடம்பெறும் முஸ்லிம் பிரதிநிதி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டுமெனவும், அப்போதே

(16ஆம் பக்கம் பார்க்க)

# கடத்தப்பட்ட தமிழ் வர்த்தகரை விடுவிக்க ரூபா 2 கோடி கப்பம்

கொழும்பு, பெப்.11

கடந்த புதன்கிழமை கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்ட பிரபல தமிழ் வர்த்தகர் வடிவேல் ஆனந்தனை விடுவிப்பதற்காகக் கடத்தல்காரர்கள் இரண்டு கோடி ரூபாவை கப்பமாகக் கோரியிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

செட்டியார் தெருவிலுள்ள நகைக்கடையொன்றின் உரிமையாளரான மேற்படி வர்த்தகர் கடந்த புதன்கிழமை வெள்ளவத்தை அலக்சாண்ட்ரா வீதியிலுள்ள அவரது வீட்டுக்கு அருகில் வைத்து வெள்ளை வானில் வந்த நபர்களால் கடத்தப்பட்டார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# வர்த்தகரைக் கடத்தியோரை கூண்டோடு கைதுசெய்வோம்!

## பிரதிப் பொலீஸ்மா அதிபர் சூளுரை

கொழும்பு, பெப்.11

தமிழர்கள் செறிந்து வாழும், தலைநகரின் முக்கியமான பிரதேசமான வெள்ளவத்தையில் தமிழ் வர்த்தகரொருவர் கடத்தப்பட்டிருக்கின்றமை நகரப் பாதுகாப்பையே கேள்விக் குறியாக்கியிருக்கிறது. இது சம்பந்தமான முழு அளவிலான விசாரணைகளை நடத்திவருகிறோம். கடத்தல்காரர்களைக் கூண்டோடு கைதுசெய்வோம்.

- இவ்வாறு நேற்றுக் காரசாரமான கருத்துக்களை வெளியிட்டார் கொழும்பு மாவட்ட பிரதிப்பொலீஸ்மா அதிபர் பூஜித்த ஜயசுந்தர. வெள்ளவத்தையில் வர்த்தகரொருவர்

(13ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் விவசாயி மீது அக்கரைப்பற்றில் சூடு!

கொழும்பு,பெப்.11

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்றில் முஸ்லிம் விவசாயி ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுடப்பட்டு, படுகாயமடைந்த நிலையில் அம்பாறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சூட்டுச் சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்று முதலாம் குறிச்சியைச் சேர்ந்த டபிள்யூ.எல்.எம். நஜீப்தீன் (வயது-44) என்பவரே இவ்வாறு சுடப்பட்டார்.

தனது வீட்டிலிருந்து நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளில் இவர் பயணித்த

(16ஆம் பக்கம் பார்க்க)

# வெலிகந்தப் பகுதிக்கு வந்தால் தாக்குவோம்! கண்காணிப்புக் குழுவுக்குப் பயமுறுத்தல்!!

மட்டக்களப்பு,பெப் .11

இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட குழுவினருக்கு தொலைபேசியூடாக கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது.

கடத்தப்பட்டிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் கண்காணிப்புக் குழுவின் முயற்சிகளுக்குத் தடைபோடும் விதத்தில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக்குழு ஒன்றினால் இந்த மிரட்டல் விடுக்கப்பட்டிருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெலிகந்த பகுதிக்கு வர முற்பட்டால் தாக்குதல் நடத்தப்படும் என்று கண்காணிப்புக் குழுவினர் எச்சரிக்கப்பட்டிருக்கின்றனர்.

கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு குழுத் தலைவருக்கு கிடைத்த அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்றின் ஊடாக இந்த மிரட்டல் விடுக்கப்பட்டிருக்கின்றது என்று மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருக்கின்றது.

கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களைத் தேடி அவர்களது உறவினர்

(16ஆம் பக்கம் பார்க்க)

# படுக்கையில் வைத்து மனைவியை வெட்டிக் கொன்றார் கணவன்!

## திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,பெப்.11

தலை மற்றும் பிடரிப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்ட நிலையில் இளம் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை திருநேல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் பெண்ணை அவரது கணவரே படுக்கையில் வைத்துப் படுகொலை புரிந்துள்ளார் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

பாற்பண்ணை, இரண்டாம் ஒழுங்கையில் வசித்துவந்த சிவசீலன் ஜெயசுதா என்ற 29 வயதுடைய குடும்பப் பெண்ணே கொலையுண்டவராவார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### மரம் அரிவு ஆலை திறப்பு விழாவில் பரிமாறிய

# மதிய உணவில் நஞ்சு கலந்தது உட்கொண்ட 20 பேர் மயக்கம்!

யாழ்ப்பாணம்,பெப்.11

மரம் அரிவு ஆலை ஒன்றின் திறப்பு விழாவில் பரிமாறப்பட்ட மதிய உணவில் நஞ்சு கலந்ததில் அதை உட்கொண்டவர்களில் 20 பேர் மயக்கம் மற்றும் உணர்விழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இவர்களில் இருவர் தொடர்ந்தும் மயக்க நிலையில் உள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

கொக்குவில், நந்தாவில் பகுதியில் புதிதாக நிறுவப்பட்ட மரம் அரிவு ஆலையின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அந்த வைபவத்தில் மதிய உணவு பரிமாறப்பட்டது. உணவை உட்கொண்ட சிறிதுநேரத்தில் பலருக்கும் தலைச்சுற்று மற்றும் மயக்கம் ஏற்பட்டது.

மதிய உணவை உட்கொண்டவர்களில் இருவர் மயக்கமடைந்தனர். பெண்கள் உட்பட

(16ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கு அருகில் உள்ள சாவடிகளை அகற்றுவதற்கு கல்வி அமைச்சர் நடவடிக்கை

## படையினரின் பிரசன்னமும் படிப்படியாகக் குறைக்கப்படுமாம்!

கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறாக பாடசாலைச் சூழலில் உள்ள படையினரின் சோதனைச் சாவடிகள் மற்றும் படையினரின் பிரசன்னம் என்பன படிப்படியாகக் குறைக்கப்பட்டு, ஆரோக்கியமான கல்விச் சூழல் ஏற்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதில் தெளிவாகவும், உறுதியாகவும் உள்ளார். இவ்வாறு தெரிவித்தார் கல்வி உயர் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழுவொன்று நேற்று இசுறுபாயவிலுள்ள கல்வி அமைச்சரின் அலுவலகத்தில் அமைச்சரைச் சந்தித்து தமிழ் மொழிமூலக் கல்விப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடியபோதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் படையினரின் சோதனைகள், கெடுபிடிகள், கைதுகள் போன்றவற்றால் ஆரோக்கியமான கல்விச் சூழல் இல்லையென்பதைச் சுட்டிக்காட்டிய சங்கத் தூதுக்குழு, படையினரை பாடசாலைச் சூழலில் இருந்து நீக்கி ஆரோக்கியமான கல்விச் சூழலை ஏற்படுத்தவேண்டும் எனக் கோரியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### தென்பகுதித் தீவிரவாதிகளைத் திருப்திப்படுத்தவேண்டிய தேவை

தென்னிலங்கையில் இருக்கும் தீவிரவாதசக்திகளையும் திருப்திப்படுத்தி செயற்பட வேண்டிய தேவை இருப்பதாலேயே படிப்படியாக நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவித்த கல்வி அமைச்சர், விரைவாகச் சமாதானச் சூழலில் மாணவர்கள் கற்கக்கூடிய நிலை வரும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படும்போது, தமிழ் மாணவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகின்றமை தொடர்பாகச் சங்கத் தூதுக்குழு சுட்டிக் காட்டி தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு நீதி கிடைக்க ஆவன செய்யவேண்டும் என வலியுறுத்தியபோது பதிலளித்த அமைச்சர் -

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இவ்விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் கலந்துரையாடல் ஒன்று நடைபெற இருப்பதால், அக் கலந்துரையாடலில் சங்கத்தின் பொதுச் செயலாளரையும் கலந்துகொள்ளும்படியும் அப்போது ஆராய்ந்து முடிவுகளை எடுக்கலாம் என்றும் பதிலளித்த அமைச்சர், சகலருக்கும் சமவாய்ப்பு அளிப்பதை தான் உறுதிப் படுத்துவேன் எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்கெனத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பின்னர் வேறு பல்கலைக் கழகங்களுக்கு மாற்றம் பெறுவதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகச் சங்கம் சுட்டிக் காட்டியபோது, பதிலளித்த கல்வி அமைச்சர் எதிர்காலத்தில் அவ்வாறான மாற்றங்களை தாம் அனுமதிக்கப் போவதில்லை என உறுதியளித்தார்.

### தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினை

வடக்கு - கிழக்கில் ஏறக்குறைய ஆறாயிரம் தமிழ் மொழிமூலத் தொண்டர் ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர். இவர்களில் 495 பேர் மட்டும் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். 1995ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாகச் சேவையாற்றும் அடிப்படைத் தகுதிகள் அனைத்தும் உள்ளவர்கள் ஆயிரக்கணக்கில் தெரிவுசெய்யப்படாமல் உள்ளனர் எனச் சுட்டிக் காட்டிய சங்கத் தூதுக்குழு அவர்களுக்கும் நிரந்தர நியமனம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என வலியுறுத்தியதற்கு பதிலளித்த அமைச்சர்,

சகல தொண்டர் ஆசிரியர்களையும் நிரந்தரமாக்க முடியாது. ஆனால் சகல தகுதிகள் இருந்தும் நிரந்தரமாக்கப்படாதவர்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் அறிக்கையைப் பெற்றுத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவேன் என உறுதியளித்தார்.

### நூல் விநியோகத்தில் பாகுபாடு

8ஆம் தர மாணவர்களுக்கான பாடநூல்கள் ஏறக்குறைய இரண்டு மாதம் முடிவடையும் நிலையிலும் இன்றுவரை தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் 8ஆம் தரத்தில் கற்கும் தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு கல்வியில் சம வாய்ப்பு மறுக்கப்படுகின்றது. குறிப்பாக மேற்படி தரத்தில் கற்கும் தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டம் என்ற அடிப்படையில் கற்பிக்க வேண்டியிருப்பதால், ஆசிரியர்களும் செய்வதறியாது திகைத்துப் போய் உள்ளனர். தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு இவ்வருடம் மாத்திரமல்ல கடந்த இரு வருடங்களாக இவ்வாறான சம வாய்ப்பு அளிக்கப்படாமை தொடர்கின்றது எனச் சங்கத் தூதுக்குழு அமைச்சரிடம் சுட்டிக்காட்டியது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், விரிவாக நூல் விநியோகத்தைச் செய்து முடிக்குமாறு அதிகாரிகளைப் பணித்ததோடு, எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறாது பாதுகாக்க தான் முன்னேற்பாடுகளைச் செய்வதாகவும் தெரிவித்தார்.

### பாட நூலின் குளறுபடிகள்

புதிதாக வெளியிடப்படும் பாடநூல்களில் பலவகையான பிழைகள் காணப்படுகின்றன. எழுத்துப் பிழைகள், கருத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள், தரக்குறைவான வசனநடை போன்ற பல குளறுபடிகள் காணப்படுகின்றன.

கடந்த வருடங்களில் நாம் சுட்டிக்காட்டியபோது அவை திருத்தப்படும் எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் நடவாது எனவும் உறுதிமொழி வழங்கப்பட்டது. ஆனால் இவ்வருடம் வெளியிடப்பட்ட நூல்களிலும் நிலைமைகள் மாறவில்லை எனச் சங்கத் தூதுக்குழு சுட்டிக் காட்டியது.

இதனைக் கவனத்தில் எடுத்த அமைச்சர், எதிர்காலத்தில் நூலின் பிரதியை இறுவட்டில் தருவதாகவும், அதிலுள்ள பிழைகளைத் திருத்திச் சங்கம் தந்தபின்னர் வெளியிட நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். அத்துடன் இந்த முடிவை நடைமுறைப் படுத்துமாறு வெளியீட்டுத் திணைக்கள உதவி ஆணையாளருக்கும் ஆலோசனை வழங்கினார்.

அமைச்சருடன் அமைச்சின் இணைப்புச் செயலாளர் பண்டார, கல்விப்பணிப்பாளர் வ.குணரட்ண, கல்வி வெளியீட்டு ஆணையாளர் மதிவதனம் ஆகியோர் கலந்து கொண்டனர். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தலைமையில் சென்ற தூதுக்குழுவில் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், துணைத் தலைவர் திருமதி ஈ.ஜே.மகேந்திரா, துணைப் பொதுச் செயலாளர் எஸ். நாகேந்திரராசா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

### ஏற்கனவே நடைபெற்ற கலந்துரையாடல் முடிவுகளையும் நடைமுறைப்படுத்தப் பணிப்பு

இந்தக் கலந்துரையாடலின்போது அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, முன்னர் கல்வி அமைச்சராக இருந்தபோது நடை பெற்ற இரு கலந்துரையாடல்களின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் 5 வருட காலம் கடந்தும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டிய பொதுச் செயலாளர் த.மகாசிவம், தற்போதாவது இவற்றை நடைமுறைப் படுத்த ஆவன செய்யுமாறு அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

இதற்கு சம்மதம் தெரிவித்த அமைச்சர், பொதுச் செயலாளரிடம் இருந்த அந்தக் கூட்டங்களின் அறிக்கையைப் பெற்று அவற்றை உடன் நடைமுறைப் படுத்த ஆவன செய்யுமாறு அதிகாரிகளைப் பணித் தார். (எ)




திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட குடும்பப் பெண்ணின் சடலத்தை முதல் படத்தில் காணலாம். யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உறவினர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்வதை அடுத்த படத்தில் காணலாம். (படங்கள் : பிரபா,நேசன்)

# கிழக்கு முஸ்லிம் ஒருவருக்கு இடமளித்து விட்டுக் கொடுக்கிறாராம் பாயிஸ் முஸ்தபா

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அமைதிப் பேச்சுகளில் பங்குகொள்ளும் முஸ்லிம் பிரதிநிதி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவராக இருக்க வேண்டும் என்று பலரும் விரும்புகின்றனர். அதனால்தான் விட்டுக்கொடுப்பொன்றைச் செய்தேன்.

- இவ்வாறு நேற்றுக் கருத்துத் தெரிவித்தார் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா. அமைதிப் பேச்சுக்கான அரச குழுவில் முன்னதாக இடம்பெற்றிருந்த பாயிஸ் முஸ்தபா அந்தப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். இந்த விலகலுக்கான காரணம் குறித்துக்கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:- அமைதிப் பேச்சுக்கான அரச குழுவில் எனது பெயர் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் இந்தப் பொறுப்பில் நியமிக்கப்பட வேண்டுமென்று பலரும் விரும்பினர். அதுவும் ஒரு நல்ல முடிவு எனக் கருதியதால், நான் எனது பொறுப்பிலிருந்து விலகி விட்டுக்கொடுத்தேன். இந்தப் பொறுப்புகளிலிருந்து விலகினாலும் அமைதிப் பேச்சுக்குத் தேவையான ஒத்துழைப்புக்களையும், ஆலோசனைகளையும் நான் தொடர்ந்து வழங்குவேன்.

- இவ்வாறு கூறினார் பாயிஸ் முஸ்தபா. (ஐ-க)




# கைலாசபிள்ளையாரில் இன்று 108 சிவலிங்கம் பிரதிஷ்டை

யாழ்ப்பாணம்,பெப்.11

தைப்பூசத்தினமான இன்று நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் ஆலயத்தில் 108 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப் படவுள்ளன.

மேற்படி பிரதிஷ்டை தொடர்பான [illegible] ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வந்தமை தெரிந்ததே. (எ)

## அவதூறு செய்து கார்ட்டூன் பிரசுரிப்பதா?

# பல்லாயிரக் கணக்கில் முஸ்லிம் மக்கள் திரண்டு பரவலாக எதிர்ப்புத் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.11

முஹம்மது நபியைச் சிறுமைப்படுத்தும் விதத்தில் சித்திரிக்கும் கேலிச்சித்திரங்கள் (கார்ட்டூன்கள்) மேற்கு நாட்டுப் பத்திரிகைகளில் பிரசுரமானதை ஆட்சேபித்து நேற்று இலங்கையில் நாடு தழுவிய ரீதியில் பல இடங்களில் முஸ்லிம்களால் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டமொன்றை கொழும்பு மருதானை ஸாகிரா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்பாக நேற்று மதியம் ஜும்ஆத் தொழு கைக்கு பின்னர் இடம் பெற்றது.

'அல்லாஹு அக்பர்' என வானைப்பிளக்கும் கோஷத்தை எழுப்பிய முஸ்லிம்கள் வீதிகளை மறித்தபடி தமது எதிர்ப்பை சுமார் ஒரு மணிநேரம் வெளிப்படுத்தினர். ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'இறைவனை அவமதிக்காதே!', 'இஸ்லாத்தை அவமதிக்காதே!' 'பத்திரிகைச் சுதந்திரத்தை உண்மைக்குப் பயன்படுத்து!', 'இறைவனைக் கேலியாகச் சித்திரிப்பது பத்திரிகைச் சுதந்திரமா?' என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகை களை மும்மொழிகளிலும் தாங்கிப் பிடித்தி ருந்தனர்.

இந்தக் கார்ட்டூன்களை டென்மார்க் நாட்டுப் பத்திரிகை ஒன்றே முதலில் பிரசுரித்திருந்ததால் சீற்றமுற்ற குழுவினர் அந்த நாட்டின் கொடியை நேற்றைய ஆர்பாட்டத்தின் போது தீயிட்டு எரித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் பின் பள்ளிவாசல் முன்றிலில் கூடிய முஸ்லிம்கள் முன்னிலையில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் முஜிபுர் ரஹ்மான் , முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் சிலரும் உரையாற்றினர்.

நேற்றைய மருதானை ஆர்பாட்டத்திற்கு ஆதரவும் ஐக்கியமும் தெரிவித்து கொழும்பு நகரத்தின் மெயின் வீதி, குறுக்குத் தெரு வர்த்தகர்கள் தமது கடைகளைப் பூட்டி தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, புத்தளம், அக்குரணை, அம்பாறை மற்றும் ஏறாவூர் பகுதிகளிலும் நேற்று ஜும்ஆத் தொழுகைக்குப் பின்னர் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் முஸ்லிம்கள் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இடங்களிலும் மக்கள் 'டென்மார்க்' நாட்டின் கொடியை தீயிட்டு எரித்தனர்.

(ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அர்த்தமுள்ள யுத்த நிறுத்தம் குறித்து பேசுவதில் அர்த்தம் ஏதும் உண்டா?

ஜெனீவாவில் அரசுப் பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளும் எது குறித்துப் போய்ப் பேசப்போகின்றார்கள்?

"தற்போதைய யுத்த உடன்பாட்டு விதிகளை செம்மையாக நடைமுறைப்படுத்துவது பற்றி மட்டுமே பேசப்படும். அதற்கு அப்பால் எந்த விடயமும் பேசப்படமாட்டாது. ஜெனீவாப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் அதுதான்" - இப்படி விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர்.

ஜெனிவாப் பேச்சுப் பற்றிய அறிவிப்பை வெளியிட்ட சமயம் - கிளிநொச்சியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே - புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இதைத் தெளிவாக அறிவித்துவிட்டார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் ஊடகவியலாளரைச் சந்தித்த போது, இதே அறிவிப்பைத் திரும்பவும் தெளிவு படுத்தியுள்ளார் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

ஜெனிவாப் பேச்சுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டதை ஒட்டி, அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பின் சார்பில் அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலும் இதே கருத்தே தொனித்திருந்தது.

"2002 பெப்ரவரி 22ஆம் திகதி கையெழுத்தான யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கத்தை எப்படி மேம்பாடடையச் செய்யலாம் என்பது பற்றி இரு தரப்பினரும் (புலிகளும், அரசுக் குழுவினரும்) (ஜெனீவாவில் கூடி) ஆராய்வர்" - என்று நோர்வே வெளிவிவகார அமைச்சின் அறிக்கை தெரிவித்திருக்கின்றது.

இப்போது பேச்சுக்கான தொனிப்பொருள் குறித்து - மையக் கருத்துப் பற்றி - புதிய நிலைப்பாடு ஒன்று இலங்கை அரசுத் தரப்பினால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

"ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சுகள் அர்த்தமுள்ள போர்நிறுத்த ஒப்பந்தம் என்ற அடிப்படையைக் கொண்டிருக்கும்" - என்று அரசு அறிவித்திருக்கின்றது. அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை வெளியிடும் அரசின ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

அது என்ன 'அர்த்தமுள்ள போர்நிறுத்தம்'? என்ற கேள்வி எழுகின்றது. 'அர்த்தமுள்ள போர்நிறுத்தம்' என்ற சொல்லாடல் மூலம் அரசுத் தரப்பு என்ன கருத்தை முன்வைக்க முயல்கின்றதோ தெரியவில்லை. ஆனால், போர் நிறுத்தத்துக்கு வழிசெய்த புரிந்துணர்வு உடன்பாட்டு வாசகங்களை அட்சரம் பிசகாமல் அப்படியே நடைமுறைப்படுத்துவதுதான் 'அர்த்தமுள்ள போர்நிறுத்தமாக' இருக்க முடியும். அதுதான் யதார்த்தம்.

அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினரும் உயர்மட்டத்தில் அனுசரணையாளர்கள் ஊடாக நீண்ட ஆராய்வுகள், கருத்துப் பரிமாற்றங்கள், பிடிவாதங்கள், விட்டுக்கொடுப்புகள் ஆகியவற்றின் பின் - பல மாதகால நுணுக்கமான பரிசீலனையின் பின் - இந்த ஒப்பந்த வாசகத்தை இறுதியாக்கி ஒப்பமிட்டனர். அது சரிவர நடைமுறைப்படுத்தப்படாமையால் தான் இவ்வளவு நெருக்கடிகளும் ஏற்பட்டன என்பது யாருக்கும் தெரிந்ததுதான்.

ஆகவே, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அர்த்தமுள்ளதாக்குவதாயின் அதில் கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்த இருதரப்பும் முன்வரவேண்டும். 'அர்த்தமுள்ள யுத்தநிறுத்தம்' குறித்து அதிகம் பேசும் அரசுத் தரப்பு அதற்குத் தயாரா என்பதே கேள்வி.

யுத்தநிறுத்த ஒப்பந்த ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதில் அரசு, புலிகள் ஆகிய இருதரப்பிலும் தவறுகள் இருக்கலாம். அவை திருத்தப்பட வேண்டும். ஆனால், இந்தத் தவறுகளைத் திருத்த வழி செய்கின்ற கொள்கை நிலை மாற்றத்துக்கு அவை தயாரா என்பதே இப்போதுள்ள சர்ச்சை.

* உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அரசுப் படைகள் ஆக்கிரமித்து நிற்கும் தமிழ் மக்களின் வாழ்வாதாரப் பூமியை - தாயக மண்ணை - விட்டு விலக ஆக்கிரமிப்பு இராணுவம் தயாரா?

* தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் பொதுக் கட்டடங்கள், வணக்கஸ்தலங்கள், வீடுவாசல்களை விட்டு விலக அரசுப் படைகள் இணங்குமா?

* தமிழ் மக்களின் அன்றாட ஜீவனோபாயப் பிழைப்புக்குக் குறுக்காக நிற்கும் விதத்தில் - கடலில் தொழில் செய்யவும், நிலத்தில் விவசாயம் செய்யவும், அன்றாடப் பணிகளை மேற்கொள்ளவும் தடைவிதித்து - தான் போட்டிருக்கும் தடைகளை வாபஸ் பெற்று, மக்களின் இயல்பு வாழ்வுக்கு அனுமதிக்க சிங்களப் படைகள் சம்மதமா?

- இவையெல்லாம் யுத்த நிறுத்த உடன்பாட்டு ஏற்பாடுகளில் காலவரையறை குறிப்பிட்டு செய்யப்பட வேண்டியவை என்று பொறிக்கப்பட்டுள்ளவை. அந்தக் காலவரையறைகள் தாண்டிக் காலம் அதிகம் கடந்துவிட்டது.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் உள்ள துணைப்படைக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து அவற்றைத் தமிழர் தாயகத்துக்கு அப்பால் அப்புறப்படுத்த வேண்டும் என்பதும் இந்தக் கடப்பாட்டில் அடங்குகின்ற விடயம்.

விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள், அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குத் தாராளமாக வந்து அரசியல் பணி செய்யக்கூடிய இயல்புநிலையை உருவாக்குவதும் அரசுப் படைகளின் பொறுப்பு. அமைதி முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் முன்நகர்வதற்கு இந்த அரசியல் தொடர்பாடல் மிகவும்முக்கியமானது.

இவை எல்லாம் யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகளின் கீழ் நிறைவு செய்யப்படவேண்டிய கடப்பாடுகள்; பொறுப்புகள். இவற்றைப் பூர்த்தி செய்வதற்கு அரசுத் தரப்பு தயார் என்றால் அது, 'அர்த்தமுள்ள யுத்த நிறுத்தம்' குறித்துப் பேசுவதில் அர்த்தம் இருக்கும். அரசுத் தரப்புத் தயாரா?

ஜெனீவாப் பேச்சுகளில் உண்மை வெளிக்கும்.

## தர்சினி படுகொலைச் சம்பவம்:

# அவதூறாகப் பேசிய அமைச்சருக்கு எதிராக சென்னையில் மகளிர் திரண்டு ஆர்ப்பாட்டம்

சென்னை, பெப்.11

ஸ்ரீலங்கா கடற்படையால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு தர்சினியை சென்னையில் அவதூறாகப் பேசிய ஸ்ரீலங்கா அமைச்சர் திஸ்ஸ விதாரனவைக் கண்டித்து சென்னையில் பெண்கள் அமைப்பினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சென்னை விக்டோரியா நினைவு மண்டபம் எதிரே நேற்றுமுன்தினம் மாலை நடந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு பெண்கள் இயக்கத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் பங்கேற்றனர்.

அண்மையில் சென்னையில் ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய சிறிலங்கா அமைச்சர் திஸ்ஸ விதாரன, புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட தர்சினி ஓர் பாலியல் தொழிலாளி என்றும் இராணுவத்துக்கு சேவையாற்றுபவர் என்றும் கூறியிருந்தார்.

ஸ்ரீலங்கா அமைச்சரின் இந்த அவதூறைக் கண்டித்து தமிழகப் பெண்கள் எழுச்சி அமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அன்னையர் முன்னனியின் தலைவரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான பேராசிரியா சரஸ்வதி தலைமைவகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் மனித உரிமைச் செயற்பாட்டாளர் ரி.எஸ்.எஸ். மணி, வழக்கறிஞர் மணிராஜ், தந்தை பெரியார் திராவிடக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழா இயக்கத்தின் பொதுச் செயலாளர் தியாகு, கிராமப் பெண்கள் இயக்கத்தின் நிர்வாகி சாந்தி, தலித் பெண்கள் விடுதலை இயக்கத்தின் நிர்வாகி மகிமை உட்படப்பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர். (3-6)



உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதை அடுத்து, நாட்டிலுள்ள மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் தோறும் வாக்காளர் இடாப்புப் பிரதிகள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. யாழ்.மாவட்ட செயலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புப் பிரதிகளை படையினரும் பொதுமக்களும் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள் - பிரபா)

# தீயணைப்புப் பிரிவுக்கு வசதிகள் போதாது; பெற்றுத் தரக் கோரியும் பயனில்லை!

## விசனம் தெரிவிக்கிறார் மாநகர ஆணையாளர்

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு போதிய வசதிகளைப் பெற்றுத் தருமாறு பல தரப்பினிடமும் கோரிக்கை விடுத்தும் அதனைப் பெற்றுத்தர எவரும் முன்வரவில்லை என்று விசனம் தெரிவிக்கிறார் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாநகர சபையின் மிகவும் அத்தியாவசிய அவசர மனிதாபிமானப்பணிகளை மேற்கொள்ளும் பிரிவாக தீயணைப்புப் பிரிவு இயங்குகிறது.

ஆனால், அந்த மனிதாபிமானப் பணிகளை மக்கள் மந்தியில் திறம்படச் செய்வதற்கு போதிய வாகன வசதிகளும் அதற்குரிய இயந்திரங்களும் போதாதுள்ளன.

1986 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட தீயணைப்பு வாகனம் ஒன்று தான் தற்போது சேவையில் உள்ளது. அது கூட அடிக்கடி பழுதடைந்து போகிறது.

ஓர் இடத்தில் தீ விபத்து இடம் பெற்றுவிட்டால் அதனை உடனடியாக அணைப்பதற்குரிய போதிய நீரினை உள்ளடக்க முடியாத வாகனம் தான் உள்ளது.

அதனால் தீ அணைப்பதற்கு பல்வேறு சிக்கல்களை ஊழியர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக பல அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் தேச நிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சரிடமும் பல தடவை கோரிக்கை விடுத்துள்ளேன். ஆனாலும் அதனை நிவர்த்தி செய்ய எவரும் முன்வரவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-13)

### நாளை

தை 30
ஞாயிற்றுக்கிழமை
12.01.2006
திதி: சதுர்த்தசி
முற்பகல்; 8.59 வரை
நட்சத்திரம் : பூசம்
காலை : 7.33
பூரனை விரதம்
சுபநேரம் : 09.34 - 11.04
ராகுகாலம் :05.04 - 06.34
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு


உன் பகைவனிடமிருந்து விலகி நில்; உன் நண்பர்களிடம் எச்சரிக்கையாயிரு; - ஓர் அறிஞர்

## 25 உள்ளகப் பயிற்சி டாக்டர்கள் கடமையேற்பு

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உள்ளகப் பயிற்சி டாக்டர்களாக 25 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்று வெளியேறிய மேற்படி வைத்தியர்கள், கடந்த புதன் கிழமை தொடக்கம் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர். (எ-139-202)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழிபெயர்ப்பு

நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், கடிதங்கள் முதலியவை தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய எந்த மொழியிலிருந்தும் அவற்றுள் எந்த மொழிக்கும் மொழிபெயர்த்து கணனியில் பிரதிகள் எடுத்துத் தரப்படும். கடிதங்கள், சத்தியக் கடதாசி, சகலவிதமான விண்ணப்பப் படிவங்கள் நிரப்புதல் ஆகியவையும் செய்து தரப்படும். T.Sagathevan, B.A.Lond. ஆங்கில/சிங்கள [பிரத்தியேக] ஆசிரியர், 46,பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2223520. (46509)(21.19.45)

## இலவச கணனிப் பயிற்சி

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் நிர்வாகத்தின் கீழ் இணுவில் கிழக்கு இளைஞர் கழகம் நடத்தும் கணனி வகுப்புகள்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

11.02.2006 - சனிக்கிழமை
பிரிவு I 9 a.m.
பிரிவு II 10.30 a.m.

இளந்தாரி கோயிலடி, இணுவில் கிழக்கு.
இணுவில் கிழக்கு இளைஞர் கழகம்.
(46593)(21.19.45)

## விற்பனைக்கு

Management Diary கள் மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் புதிய இந்திய வெளியீடுகளான நாவல்கள், சிறுவர் கதைகள் என்பன விற்பனையாகின்றன.

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**
234, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(சி47774) (21.16.17)

## பணிப்பெண் தேவை

கணவன், மனைவி இருவரும் தொழில் புரியும் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் ஒரு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் கதைத்து முடிவு எடுக்கப்படும். வீட்டில் தொடர்ந்து இருக்கும் பெண் விரும்பத்தக்கது. சனி, ஞாயிறு தினங்களில் நேரில் தொடர்புகொள்ளவும். 49/4, மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடம். (46637)(21.19.45)

## REFRESH SYSTEM

* Computer Service/Sales * Video Convertions
* Visiting Cards Making
At your Place
Conduct: Suthumalai South, Manipay.
T.P.: 077 3253104, 077 6279671. (46472)

## தேவை

காலையிலும் மாலையிலும் வேலை செய்வதற்குப் பெண் பிள்ளைகள் தேவை. பி.ப.4 மணிக்கு பின் நேரில் வரவும்.
தொடர்பு: சாயி மெடி கெயார் சென்ரர்
82, பிறவுண் வீதி, நீராவியடி [பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக]
Tel. 222 3207 (46599) - நிர்வாகி.

## சமுர்த்தி மீளாய்வுக் குழுக்கள் அமைப்பு

சமுர்த்தி நிவாரண மீளாய்வு செய்யவுள்ள மேன்முறையீட்டுக் குழுக்களுக்கான கருத்தூட்டல்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

சமுர்த்தி அதிகார சபையால் வழங்கப்பட்டு வரும் முத்திரைகளைப் பெறத் தகுதியிருந்தும் அவை கிடைக்காதவர்களால் மீளாய்வுக் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றைப் பரிசீலனை செய்வதற்கென கிராம அலுவலர் பிரிவு ரீதியாக கிராம அலுவலர், அரச மற்றும் சமூக சேவையாளர்களை உள்ளடக்கிய மேன்முறையீட்டுக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுவின் சிபார்சின்படியே பாதிக்கப்பட்ட மக்களும் சமுர்த்தி முத்திரையைப் பெறமுடியும்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மேற்படிக் குழுக்களுக்கான கருத்தூட்டல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.
(3-161-202)

## முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா இன்று

அராலி தெற்கு துறைமுக வீதியில் அமைக்கப்பட்டுள்ள இன்பத் தமிழ் முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

உரும்பிராய் கிராம சேவையாளர் க.கனகநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். அரச அதிபர் கே. கணேஸ் கலந்து கொள்வார். (3-203)

## முழு நிலாக் கருத்தரங்கு

இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்.
காலம் : 12-02-2006 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப.3.30 மணி
தலைவர்: திரு.வி.கணேசராஜா (அதிபர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.)
விடயம்: பஞ்சாங்கங்களும் எமது பண்டிகைகளும்
பேராசிரியர்.பொ.இரகுபதி [கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்]
ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம். (சி/47804)(26-21-19.45) செயலாளர்.

## 11 ஆவது ஆண்டு நினைவலைகள்



அமரர்
**ஏரம்பு சோதிலிங்கம்**
(மண்டைதீவு)

மண்ணுலகில்
26.04.1926
விண்ணுலகில்
15.01.1995

திதி: 11.02.2006

*அறிவுப் பெட்டகமே ஆற்றலின் சிகரமே*
*வீரத்தின் இமயமே புகழ் பூத்த குலமகனே*
*கண்டோர் மதிக்கும் தலைவனே*
*இன்னும் நின் புகழ் பேசுது இவ்வுலகு*
*பதினோராண்டுகள் ஓடி மறைந்தாலும்*
*ஆறாதையா எங்கள் துயர்*
*என்றும் உங்கள் நினைவில் வாடும் நாம்*
*உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கின்றோம்*
*ஓம் சாந்தி!*

2/2, நீராவியடி,
பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
சகோதரி, மைத்துனர்.
(46629)(39-21-19-45)

## 31 ஆம் நாள் நினைவாக...



அன்னையின் மடியில்
12 - 10 - 1938

இறைவன் திருவடியில்
12 - 01 - 2006

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட
**திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரி**

*எங்கள் அன்பின் திருவுருவமே*
*அணையா ஒளிவீசும் மணிவிளக்கே*
*எங்கு சென்றாலும் உங்கள் நினைவு*
*அகலாதம்மா*
*எங்களுடன் இருக்கிறாயம்மா!*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

இன்று (11.02.2006) சனிக்கிழமை நண்பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாவடி தெற்கு,
கொக்குவில். (46631) (21.19.45) -குடும்பத்தினர்.



## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவில்...

அமரர்
**செல்லையா ரஜனிகாந்**
(சுரேன்/ சங்கமன்)

பிறப்பு 22.11.1974
இறப்பு 24.01.2005

திதி:தைமாத வளர்பிறை, சதுர்த்தசி

*நேற்றுவரை நீ நேரிலிருந்தாய்*
*கண்களிலே*
*பூத்தது போற் பூத்துப் புன்னகைத்தாய்*
*எங்களுடன்*
*பேசிக்களித்தாய் போய்விட்டாய்*
*எமைவிட்டு*
*ஈரவிழியிங்கு எமக்கின்னும்*
*காயவில்லையே*
*மீளாத்துயில் மீண்டு மீள*
*வரமாட்டாயா!*
*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

குடும்பத்தினர்.
நாயன்மார்கட்டு,யாழ்ப்பாணம். (46600)

யாழ்ப்பாணம் - கோட்டை
## அருள்மிகு முனீஸ்வரர் தேவஸ்தான தைப்பூசத் திருவிழா - 2006

முனீஸ்வரர் மெய்யடியார்களே!

நிகழும் பார்த்திப வருஷம் தை மாதம் சனிக்கிழமை 29 ஆம் நாள் (11.02.2006) முற்பகல் 11 மணிக்கு உருத்திரா அபிஷேகத்துடன் பூசை ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விஷேட பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெறும்.

அனைத்து அடியார்களையும் கலந்துகொண்டு கோட்டை முனீஸ்வரரின் அருளைப் பெற்று ஏகுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

யாழ்.சிறைச்சாலைத் திணைக்கள உத்தியோகத்தர்கள்.
யாழ்ப்பாணம். (46642)(21.19.45)

## விண்வெளிவியத்தகு விந்தைகளின் விகடன்

விண்வெளியின் திடுக்கிடும் தகவல்கள்
சுவை, சுவாரஸ்யம் நிறைந்தது.
யாழ்.மாவட்ட சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர் : **ஏ.தனராஜ் (தனா) (I.D.C.P.)**
சொப்பிங் கொம்பிளக்ஸ்
கொழும்பு -11
T.P. 0779789323
or
0776991662
(46630)(21.19.45)

## ஐந்தாம் வருட நினைவஞ்சலி



தோற்றம் 04 - 03 - 1952
மறைவு 11 - 02 - 2001

அமரர் **வைத்திலிங்கம் துரைசிங்கம்**
திதி:11.02.2006

5ஆம் ஒழுங்கை, அரசடி வீதி,
நல்லூர். (46628)(21.19.45)
நினைவுடன்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சண்முகராசா புனிதவதியம்மா (ரேணுமதி)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதியம்மா (ரேணுமதி) சண்முகராசா 09.02.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (ஆசிரியர்) - நாகம்மா தம்பதியரின் புத்திரியும் காலஞ்சென்ற சண்முகராசாவின் (சிறாப்பர்-இலங்கை வங்கி) அன்பு மனைவியும் அன்னார் காலஞ்சென்ற கெளரிதேவி, தேவம்பிகை, தேவராஜன் (ஓய்வுபெற்ற விலை மதிப்பீட்டுத் திணைக்களம்), காலஞ்சென்ற ஜெகநாதன் (ஓய்வு பெற்ற தபாற் திணைக்களம்), குருலிங்கம் (இந்தியா), சிவைஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.02.2006) வெள்ளிக்கிழமை நண்பகலில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ச.தேவராஜன் (சகோதரர்).
இணுவில் கிழக்கு. (46674) (21.19.45)

### மேரி லூசியா பிறக்சீற் (மணி)



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மேரி லூசியா பிறக்சீற் (மணி) 09.02.2006 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் யேசுதாசனின் அன்பு மனைவியும் அமிர்தநாதர் - பாக்கியநாயகி தம்பதியரின் மகளும் காலஞ் சென்ற யோசவ் - மேரி மாக்குறேற் தம்பதியரின் மருமகளும் அந்தோனிப்பிள்ளை, செங்கோல்ராஜா, பஸ்ரியன்பிள்ளை, ராக்கி னியம்மா, லூசியா ஆகியோரின் மைத்துனியும் யோசவ், காலஞ்சென்ற பவா, கிறேஸ், அன்ரன் (சுவிஸ்), ஜெயக்குமார் ஆகியோரின் சகோதரியும் ஜோண்சன் (ஜேர்மனி), சியாமளா (ஆஸ்திரேலியா), யூர்மலா (இத்தாலி), நெவின்சன் ஆகியோரின் பாசமிகு தாயும் கொண்சி, விமலதாசன், நோபேட் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அன்ரசன், சியானி, அனற்சன், ஜெனிபர், றொசானியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.02.2006) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புனித தோமையார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மாதகல் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோ.யேசுதாசன் (கணவர்)
குடும்பத்தினர்.
கனால் வீதி,
மாதகல். (46634) (21321945)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உழைப்பவன் நான்; 'மானிய ஆணைக்குழுவிற்குள் புலி' என்று வர்ணிக்கப்பட்டவன்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு பேராசிரியர் ஹூல் கடிதம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழகத்திற்குப் புதிய துணை வேந்தரை நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தது.

பேராசிரியர் ஹூல் துணைவேந்தராக நியமிக்கப்படுவதை மாணவர்கள் விரும்பவில்லை என்று ஒன்றியம் தனது கடிதத்தில் தெரிவித்திருந்தது.

அந்தக் கடிதத்தில் தம்மீது சுமத்திய குற்றச் சாட்டுக்கள் குறித்து சிரேஷ்டபேராசிரியர் இரத்தினஜீவன் ஹூல் மாணவர் ஒன்றியத்துக்கு பதில் - விளக்கம் - அனுப்பி உள்ளார். அதன் பிரதியை அவர் ஜனாதிபதிக்கும் அனுப்பியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கடிதம் 09.02.2006ஆம் திகதிய உதயனில் வெளியாகி இருந்தது. பேராசிரியர் ஹூலின் கடிதத்தை இங்கு பிரசுரிக்கின்றோம்.

அந்தக் கடிதம் வருமாறு:-

ஜனாதிபதிக்கு நீங்கள் எழுதிய கடிதத்தில் நான் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு சேவை செய்யாதமையைக் கண்டித்தும் நான் இனப்பற்று அல்லாதவனென்றும் கூறியமை எனக்குப் பெரும் கவலையைத் தருகிறது. இது முற்றிலும் பிழையானதென்பது சங்க ஆலோசகரான பேராசிரியருக்குத் தெரிந்ததே.

நைஜீரியாவில்1978-80 காலத்தில் சேவையாற்றும் பொழுது கிடைத்த சந்தர்ப்பத்தை உபயோகித்து 600 தமிழ் விஞ்ஞான ஆசிரியர்களுக்கு இலவசமாக உத்தியோகத்துக்கான கடிதங்களையும் பெற்றுக்கொடுத்தேன். இவற்றில் அநேகர் யாழ்.பல்கலைக் கழகப் பட்டதாரிகள். பின்பு நான் பட்டப்படிப்பை முடித்து என் மனைவி நோபல் பரிசுபெற்ற ஜோர்ஜ் ஓலாவின் கீழ் கலாநிதிப் பட்டப் படிப்பில் அமெரிக்காவில் ஈடுபட்டிருந்த வேளையில், 1991 இல் பொறியியல் பீடத்தை அமைக்கப் போகிறார் எனவும் நான் மின்துறையில் தலைமை வகிக்கவேண்டுமெனவும் பேராசிரியர் துரைராஜா கேட்டிருந்தார். மனைவியின் படிப்பு முடிந்தவுடன் வருவேனென்று கூறியிருந்தேன். இது முடிந்த அதேநாள் லண்டன் பல்கலைக்கழகம் எனக்கு D.sc என்ற உயர் கலாநிதிப் பட்டத்தையும் அளித்தது. என் ஆராய்ச்சிகள் மிக உச்சச் கட்டத்திலிருந் தும், திட்டப்படி 1995 இன் முடிவில் மகிழ் மணி, எழிலினி, அன்பினி ஆகிய 3 குழந்தைப் பிள்ளைகளுடன் வந்து அவர்களை தமிழில் கற்பிக்க வேண்டுமென்ற ஆசை யால் தமிழில் படிக்க வைத்தேன்.

பொறியியல் பீடம் திறக்கப்படவும் இல்லை. தெற்கில் தன்னும் 1999 முடிவிலே தான் எனக்கொரு நிரந்தரவேலை பேராதனையிற் கிடைத்தது. பேராதனையின் சுமார் 1,600 பொறியியல் மாணவர்களில் 600இற்குகும் அதிகமானோர் தமிழர். இவர்களுக்குச் சேவை செய்வதற்கு சிரேஷ்ட பேராசிரியரான என்னை விட ஒரு பேராசிரியரும், 2 சிரேஷ்ட விரிவுரையாளருமே தமிழர்கள். இதுவும் தமிழ்த் தொண்டுதான். முழுப் பொறியியல் வகுப்பிலும் முதலாவதாகத் தேறிய நந்தக்குமார் என்பவரை விரிவுரையாளராகத் தெரியாதபோது நான் வழக்குத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டவரின் தெரிவை நிறுத்தியதும் தமிழ்த்தொண்டே. இப்படிப்பட்ட வேறும் பல எனது நடவடிக்கைகளால் என் மனைவியை வேலை நீக்கம் செய்து என்னையும் வேலை நீக்கம் செய்ய முயன்றபோது வழக்கு வைத்து எம்மிருவருக்குமாக ரூ100,000 வென்று தமிழர் தலை குனிந்து ஓடமாட்டோம் என்று காட்டியதும் தமிழ்த் தொண்டே.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் ஒரு தமிழனுக்கே இடமுண்டு. அவரைத் தெரிவு செய்வது ஜனாதிபதியின் கடமை. உங்கள் வேண்டுகோளுக்குகிணங்கப் பேராசிரியர் குமாரவடிவேலோ, கந்தசாமியோ ஜனாதிபதியாற் தெரிவுசெய்யப்பட்டால் தெரிவுசெய்யப்பட்டவரை தமிழ்ப்பற்று அற்றவர் என்றோ, சிங்களவருடன் கொஞ்சித் திரிபவர் என்றோ முடிசூட்டலாமோ? தமிழ்ப்பற்று மிகுந்தவர் என்று நீங்கள் கருதும் துணைப் பேராசிரியர் மோகனதாஸ் ஜனாதிபதியால் துணைவேந்தராக நியமிக்கப்பட்டது போன்றே மானிய ஆணைக்குழுவிற்கு நானும் நியமிக்கப்பட்டேன். கடந்த 3 வருடங்களில் நான் செய்த குறிப்பான காரியங்களாவன:-

### தமிழர்களுக்குச் செய்த சேவைகள்

1. பல வருட காலங்களாக யாழ்ப்பாணத்தில் ஒரு மாணவனுக்கு ஒரு வருடத்திற்கு மற்றைய பல்கலைக்கழகங்களை விட அரை வாசியே நிதியாக ஒதுக்கப்பட்டு வந்தது. (ஏறத்தாழ 2004க்கு யாழ். மாணவனுக்கு 44,000 ரூபாவும் ஏனையோருக்கு 80,000 ரூபாவும்). நான் இது பெரும் பிழையென்று வாதித்தபின் இது எல்லோருக்கும் ரூ90,000க்கு மேலாக 2005இல் உயர்த்தப்பட்டது.
2. வவுனியா வளாகத்திற்கு 200 மில்லியன் கட்டட நிதி குவைத் தேச சுனாமி நிதியிலிருந்து வழங்கப்பட்டு கணனித் தொழில்நுட்பப் படிப்பு வளாகத்தில் பெரிய விதத்தில் தொடக்கப்பட்டும் நான் எழுதிய முன்மொழிவின் (Pro posal) பிரகாரப்படி யாழ்ப்பாணத்தில் பெரிதாக்கப்பட்டும் உள்ளன.
3. திருகோணமலை வளாகத்தைக் கந்தளாய்க்குத் தற்காலிகமாக மாற்றும் சதி என் விடாத வற்புறுத்தலின் பேரில் ஒத்தி வைக்கப்பட்டது.
4. இயற்கைத்திறன் (APTITUDE) பரீட்சை வைத்து மாணவருக்கு அனுமதியளிக்கும் கற்கை நெறிகளான 'டிசைன்', 'ஆக்கிடெக்சர்' துறைகளுக்கு 100வீதம் சிங்களவரே அனுமதிக்கப்படுகின்றனர். இது ஏனென்று நான் வினவியதை அடுத்து ஓர் ஆணைக்குழுவின் உள்விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### ஆணைக்குழுவில் புலி என்று என்னைக் கூறினார்கள்

இவ்வாறான சேவைகளின் நிமித்தம் துணைவேந்தர் ஒருவர் ஆணைக்குழுவில் அநேகருக்கு முன்பாக "புலியொன்று கொழும்புக்கு வந்து ஆணைக்குழுவுள் புகுந்துள்ளது. அதனை வெளியேற்றவேண்டும்" என்று கத்தியது பலர் அறிந்ததே. மேலும் என் மனைவியைத் 'துரோகி' 'துரோகி' என்று அவரது சிங்களப் பீடாதிபதி குளறியதும் பலர் கேட்டதே. நான் வகுப்பிலிருந்து திரும்பியபோது, ஒரு சி.ஐ.டி.மேற்பார்வையாளர் என்னைச் சந்தித்து நான் புலியென்று சிஹல உறுமய என்னை அவதானிக்கிறது என்றும் அதனால் என் உயிருக்கு ஆபத்து என்றும் தான் சிஹல உறுமயவைக் கவனிக்கும் குழுவைச் சேர்ந்தவரென்றும் அடையாளம் காட்டி என்னச் சிறு அறிகுறி கண்டாலும் தங்களுக்கு அறிவிக்குமாறு தொலைபேசி இலக்கம் தந்து சென்றதும் குறிப்பிடத்தக்கது.

ஆணைக்குழுவில் இருந்தும் நான் சித்தி பெறாத ஒரு பெரிய காரியங்களிலொன்று பொறியியல் பீடத்தை யாழ்ப்பாணத்தில் அமைக்காமையே. நான் ஆணைக்குழுவில் சேருமுதலே மின் - கணனித்துறைகளுடன் பொறியியல் பீடத்தை 2001இல் ஆதரித்த பின், நான் மட்டுமே பொறியில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பதாரியாக இருந்த பொழுது, யாழ். பல்கலைக்கழகம் விளம்பரத்தை ரத்து செய்தது. பின்பு 2004இல் சிவில் பொறியியலை மட்டும், அத்துறை மொறட்டுவ, பேராதனை பல்கலைக்கழகங்கள் விரும்பாததால் பாதியாக்கப்பட்ட தருணத்தில், யாழ்.பல்கலைக்கழகம் விளம்பரப்படுத்தியதால் நான் விண்ணப்பிக்க முடியவில்லை. முன்பு சிரேஷ்ட விரிவுரையாளருக்குத் தேவையான அனுபவம் கூட இல்லாதவரை விஞ்ஞான பீடாதிபதியைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்ததும் தெரிந்ததே. இப்படியெல்லாம் தடுக்கப்பட்ட நான் யாழ்.கணனிப் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தபோது எனது மிகப் பரந்த கணனி அனுபவத்தையும், எழுதிய பல உலகப் புகழ்பெற்ற கட்டுரைகளையும் நான் ஒரு மின்பொறியியலாளர் என்ற பெயரில் பல்கலைக்கழகமே நிராகரித்தது. இதைத் தொடர்ந்து துணைவேந்தர், விஞ்ஞானப் பீடாதிபதிக்கு எதிராக நான் வழக்கு வைத்தமை பல்கலைக்கழகச் சமூகத்தினர் நன்கு அறிவர். என் மனைவி அனுப்பிய 4 விண்ணப்பங்கள் இதேபோல் பல சட்டவிரோத முறைகளில் நிராகரிக்கப்பட்டே தள்ளி வைக்கப்பட்டன.

### போட்டியிலிருந்து விலகினார் ஹூல்

***யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவுக்கான போட்டியிலிருந்து தான் விலகிக்கொள்கிறார் என சிரேஷ்ட பேராசிரியர் இரத்தினஜீவன் ஹூல் நேற்றுத் தெரிவித்தார்.***

***புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்காக பேரவையில் நடைபெற்ற தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட மூன்று உறுப்பினர்களில் ஹூலும் ஒருவர். ஆனால் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடும் வாசகங்கள் அடங்கிய கடிதம் ஒன்றை அவருக்கு எதிராக வெளியிட்டதன் பின்னணியில் -***

***தாம் இந்தத் தெரிவுக்கான போட்டியிலிருந்து, தனிப்பட்ட காரணங்களுக்காக விலகுகின்றார் என ஹூல் நேற்றுக் கொழும்பில் தெரிவித்தார்.***

### இனவிரோதி என்பது எதற்காகவோ

இப்படியிருக்க, நான் தமிழ்ப் பற்றற்றவன், நான் ஓர் இனவிரோதி என்று நீங்கள் மட் டும் சொல்வது எதற்காகவோ?

இப்போதுவரை துணைவேந்தர்களினுள் மிகத் திறமைசாலி என்று கருதப்படும் பேராசிரியர் துரைராஜாவும் பேராதனையில் இருந்தே வெளியாளாக யாழ்ப்பாணத்தில் முதற்தடவை சேவை செய்ய வந்தாரென்பதை ஞாபகமூட்டுகிறேன்.

மேலும் முதல் இரண்டு இடங்களிலும் உள்ள துணைவேந்தர் வேட்பாளர்கள் பேரவை அங்கத்தவர்கள் என்ற முறையில் தமக்குத் தாமே வாக்களித்தும் 17, 16 வாக்குகளையும் நான் பேரவைக்கு வெளியாளனாயிருந்தும் 15 வாக்குகளையும் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. சென்றமுறை முதல் மூன்று வேட்பாளர்களும் சுமார் 68, 64, 43 புள்ளிகளைப் பெற, மிகவும் பின்னால் நின்ற பேராசிரியர் மோகனதாஸ் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார். ஆகவே ஜனாதிபதி என்னைத் தெரிவு செய்தாலும் அவ்வாறே அமையும்.

உங்களைப் பின்னிருந்து தூண்டும் பெரியவர்களை தங்கள் குறுகிய இலட்சியங்களுக்கு உங்களைப் பாவிக்க விடாமல், நீங்கள் உங்கள் பெயரில் எழுதுவதையெல்லாம் ஆதாரங்களுடன் உண்மை என்று சிந்தித்து துணிந்த பின்னரே எழுத்தில் போடுவது தான் நல்லது அதுவே தமிழ்க் கல்விமான்களின் மரபு என்பதையும் ஞாபக மூட்டுகிறேன்.

இக்காரணங்களுக்காக நான் மிகுந்த சமூகப் பொறுப்புடனும் தமிழ் மக்களில் அதிக பற்றுடனும் யாழ்.தமிழ் மக்களை வெளியில் இருந்தேனும் சேவிக்கிறேனென்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவிக்கின்றேன்.

# கெய்ட்டி ஜனாதிபதித் தேர்லில் முன்னாள் அதிபரின் சகா வெற்றி

போர்ட் அரபு - பிரின்ஸ்,பெப்.11

அண்மையில் இடம்பெற்ற கெய்ட்டி தேர்தலில் முன்னாள் கெய்ட்டி ஜனாதிபதி றெனி பிறிவல் பெரும்பான்மை பெற்று முன்னிலையில் உள்ளார். இவர் வெளியேற்றப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஜீன் - பேர்ரிடான்ட் அரிஸ்ரிட்டின் அரசியல் சகாக்களுள் ஒருவராவார்.

முதற்கொண்டு வெளிவந்த தகவல்களின் படி 60 சதவீத வாக்குகளால் இவர் வென்றுள்ளார் என உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்னொரு முன்னாள் தலைவர் விஸ்லி மனிகட் என்பவர் 13.8 சதவீத வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளார். சாள்ஸ் ஹென்றி பாக்கர் என்பவர் 6.1 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களிற்கு முன் ஜனாதிபதி அரிஸ்ரிட் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதன் பின் இடம்பெற்ற முதலாவது தேர்தல் இது என்பது குறிப்பிடத்தக்கது. இதன்போது வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் பலர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

கடந்த இரண்டு வருடங்களாகப் பாதுகாப்பு காரணங்களிற்காக தேர்தல் ஒத்திவைக்கப் படடு வந்ததாயினும் கடந்த செவ்வாய் அன்று வாக்களிப்பின் போது அசம்பாவிதங்கள் ஏதும் நிகழவில்லை என்டது குறிப்பிடத்தக்கது.

வாக்களிப்பு வீதமும் அங்கு அதிகமாகக் காணப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. வாக்குச்சாவடிகளிலும் பெருந்தொகையான கெய்ட்டி மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்தனர். இது கடந்த காலத் தேர்தல்களைவிட அதிகம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் சிறிய சிறிய வன்முறைகள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலீஸார் மீதும் பொலீஸ் நிலையங்கள் மீதும் நடத்தப்பட்ட வன்முறைகளில் குறைந்தது மூன்றுபேர் பொலீஸாரால் கொல்லப்பட்டுள்ளனர்.

தேர்தல் திணைக்களத்தால் நேற்று அறிவிக்கப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் 65.9 சதவீத வாக்குகளைப் பெற்று நினி பிறிவல் ஆட்சி அமைக்க இருப்பது உறுதியாகிவிட்டது. அவரிற்குப் போட்டியாக எவரும் 50 சதவீத வாக்குகளையேனும் பெறாத நிலையில் அவரது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

66 வயதுடைய றெனி பிறீவல் 1996-2001 வரை கெயிட்டி ஜனாதிபதியாக இருந்தவர். வெளியேற்றப்பட்ட ஜனாதிபதி அரிஸ்ரிட்டின் அரசியல் சகாக்களுள் இவரும் ஒருவர். இவரது வருகையால் மீண்டும் அரிஸ்ரிட்டின் செல்வாக்கு [illegible] கும் என்று எதிர்பா[illegible] (ம.ரி)

# இருவேறு தாக்குதல்களில் ஆப்கான் படையினர் பலி!

ஆப்கானில் நேற்றுக் காலை இடம்பெற்ற இருவேறு குண்டுத்தாக்குதல்களில் சிக்கி ஆப்கான் படையினர் அறுவர் கொலை செய்யப்பட்டுள்ளனர். பலர்காயமடைந்துள்ளனர். வீதியோரமாகக் கிடந்த சக்திவாய்ந்த குண்டு வெடித்ததிலேயே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

முதல் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் இரண்டு படையினரே கொல்லப்பட்டனர். அங்கு மீட்புப் பணிகளை மேற்கொள்ளவென விரைந்த படையினரைக் குறிவைத்து இரண்டாவது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதில் சிக்கியே மீதிப்பேர் பலியாகினர் எனவும் ஆப்கான் பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானின் கிழக்குப்புற எல்லையில் உள்ள மலைப்பாங்கான பகுதிகளை உடைய குனார் மாகாணத்திலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

"உள்ளூர் நேரப்படி காலை 4 மணியளவில் எமது ஆப்கான் தேசிய இராணுவத்தினரின் வாகனத் தொடரணி ஒன்று குண்டுத் தாக்குதலில் சிக்கியது. அதன்போது சம்பவ இடத்தில் இரண்டு படையினர் பலியாகினர். வேறு நால்வர் காயமடைந்தனர். இதையடுத்து ஆப்கான் இராணுவத்தினர் வாகனம் ஒன்றில் உதவிக்கு விரைந்தனர் அந்த வாகனம் குண்டுத் தாக்குதலில் சிக்கியதால் மேலும் 4 படையினர் பலியாகினர் - என்று ஆப்கான் பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் ஜெனரல் முகமட் ஷாகிர் அஷ்மி ஊடகங்களிற்குத் தெரிவித்தார். ஆப்கானின் விரோதிகளே இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டனர் என அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல்களை மேற் கொண்டவர்கள் தலிபான் மற்றும் அல்கெய்டா போராளிகள் என்று ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர். (ம.ரி)

உலக அரங்கில்

# முஸ்லிம் பண்டிகையில் குண்டுவெடிப்பு: பாகிஸ்தானில் நால்வர் பலி; 12 பேர் காயம்!

முகரம் பண்டிகையை முன்னிட்டு பாகிஸ்தானில் பல இடங்களில் நேற்றுமுன்தினம் காலை முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் பேரணி நடத்தினார்கள். பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணப் பகுதியில் உள்ள ஹங்கு என்னும் நகரில் முஸ்லிம்கள் ஆயிரக் கணக்கில் ஊர்வலமாகச் சென்றனர்.

அப்போது திடீரென கலவரம் ஏற்பட்டது. ஊர்வலத்தில் புகுந்த மர்ம மனிதர்கள் [illegible] வீசினார்கள். ஒரே குழப்[illegible] இதற்கிடையே ஊர்வலத்தின் ஒரு பகுதியில் திடீரென சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் அப்பாவி முஸ்லிம்கள் 4 பேர் பலியாகினார்கள்; 12 பேர் படுகாயமடைந்தனர்.

குண்டுவெடிப்பைத் தொடர்ந்து ஹங்கு நகரில் பதட்டம் ஏற்பட்டது. அப்போது இரு பிரிவினர் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. கடைகளுக்கு தீ வைக்கப்பட்டன. இதனால் ஹங்கு நகருக்கு கூடுதல் இராணுவ வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

மலேசியா, டோகா, கட்டார், டுபாய் ஆகிய நாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு

### ஒரு மாதத்தில் பிரயாணம்

★ டோகா, கட்டார், டுபாய்

தச்சுவேலை, மேசன் வேலை, பார்பைண்டர்ஸ், எலக்ரிசியன், பிளம்பர், சாரதி, OFFICE BOY, விமான நிலையத் துப்புரவுத் தொழிலாளர், பொதி சுமப்போர் (PORTERS)

★ மலேசியாவில்

ஆண்/ பெண் இருபாலாருக்கும் பின்வரும் துறைகளில் வேலை வாய்ப்பு சுப்பர் மார்க்கட், கொம்பியூட்டர் கம்பனி, தையல் வேலை, பொது வேலை, துப்புரவுத் தொழிலாளர், உதிரிப்பாக உற்பத்தியாளர்

தொடர்பு:

**RAINBOW TRAVELS and TOURS**

32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 0777328219, 021 222 3237.

(c/.47352) (39.11.42)



## Classes Start on 11.02.2006

**Hardware & Networking** பயிற்சிகளுக்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட செய்முறை பயிற்சிக்கூடம்.

- Restricted 15 Members only in a batch
- 50% Concession only for this batches
- MCSE, CCNA, CCNP, CCIE மற்றும் A+ பரீட்சைகளுக்கான இலவச ஒழுங்கமைப்பு
- 100% உள்நாட்டிலோ / வெளிநாட்டிலோ வேலைவாய்ப்பு ஒழுங்குகள்
- Valuable course materiel Free
- 100% Practical oriented field training centre
- An Indian Engineers study centre

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு தொடர்பு நிர்வாகம்

Near Jaffna Hindu College, Opp Lane to PandiKottu Pillayar Kovil, K.K.S. Road. Opp Lane to Velankanni Church, Kasthuriyar Road, Jaffna.

**UNIT Education**
16/1, Killnar Lane, Jaffna.



## குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (சோடனையுடன்)
★ சுற்றுலா
★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் பெற்றுக்கொள்ளலாம்.



தொடர்பு:
S.SRIRANGAN,
SRI PALM BEACH REST,
RAJA THEATRE COMPLEX,
JAFFNA.

0777 283595, 0777 222180, 0773 126744.

(47736)(32-19-45-26)



## IBMS

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 12.02.2006
பிரிவு II : 14.02.2006
காலை 10.00 மணி

| கற்கைநெறி | பயிற்சிக்கட்டணம் முழுமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|---|
| Dip. in Microsoft Office | ~~3000.00~~ | 500.00 |
| Dip. in Desk Top Publishing | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Internet Technology | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Hardware Eng. | ~~5000.00~~ | 1500.00 |

**GIT** A/L மாணவர்களுக்கானது

GIT பாடத்திட்டத்திற்கான கற்கைநெறிகள் அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பமாகவுள்ளன

இணைந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் **12.02.2006** முதல் பதிவுகளை மேற்கொள்ளலாம்

Head Office : # 410, K.K.S. Road, Jaffna. T.P. No. : 021 222 8232

Branches : • NMMV Road, Nelliady • Sangaththanai, - Chavakachcheri



## FTMS Global STUDY IN SINGAPORE

Established since 1986

Singapore Quality Class

**Degree Programmes**
(Com Sce, Com Eng, BIT, BBA, Accounting, Marketing)
**Professional Courses - ACCA, CAT**
(March, April பிரிவுகளுக்கான அனுமதியும், மாணவர் குடிவரவு அனுமதியும் பெற்றுக் கொடுக்கப்படும்.)
**Minimum Qualification - GCE (O/L)**

கல்லூரிப் பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்தில் சந்திக்க
இடம்: Jaffna MPCS Hall (IT Park அருகில்)
காலம்: 12 ஞாயிறு மாலை 3.00 மணி - 6.00 மணி வரை

CREATE SUCCESS & CONFIDENCE WITH FTMS



தொடர்புகளுக்கு:077 3256575, 077 3164320



## வீடு வாடகைக்கு

K.K.S. வீதியில் சம்பியன் லேனுக்கும் பாடசாலைக்கும் அருகிலுள்ள சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்: அரச, தனியார் நிறுவனத்துக்கு உகந்தது.

தொடர்பு: T.P.: 077-3174446, 077-9672552

(46576)(32.26.19.45)



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

## றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2587

(C-43109)


## 31ஆம் நாள் நினைவும் இரங்கற் திருப்பலியும்



மண்ணில் 06 - 12 - 1937

விண்ணில் 12 - 01 - 2006

### அமரர் கணபதீ முருகேசு

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

*ஒரு மாதம் ஓடிமறைந்தாலும் உம் நினைவுகள் மறைவதில்லை - அப்பா!*
*பார் புகழும் உம் செயல்களனைத்தும் யார் தான் மறந்திடுவர் - அப்பா!*
*அன்பாலே எமை அணைத்து வளர்த்த அணையாத தீபமே எங்கள் - அப்பா!*
*கண்ணீரால் நாம் சொரியும் பூக்கள் கல்லறையில் எந்நாளும் நிறைகிறதே காண்பதற்காக மீண்டு வர மாட்டீரோ!*

எமது குடும்பத்தலைவரின் திடீர் மறைவுச்செய்தி கேட்டு ஓடோடி வந்து துயரத்தில் கலந்து ஆறுதல் கூறி பலவகையிலும் உதவியவர்கள், இல்லத்தில் வழிபாடு நிகழ்த்திய அருட்தந்தைக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி மூலம் துயரில் கலந்தவர்கள், துண்டுப்பிரசுரம் மூலம் அஞ்சலி செலுத்தியோர் மற்றும் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் என்றும் மறவாத எம் நன்றிகள்.

இன்றைய தினம் (11-02-2006) சனிக்கிழமை துன்னாலை புனித சதாசகாய அன்னை ஆலயத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் இரங்கற் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மாதா கோயிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(46582)(26-19-45)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஈழ அகதி ஒருவர் மண்டபத்தில் கைது

ராமேஸ்வரம்,பெப்.11

தமிழகம் சென்றுள்ள இலங்கை அகதி ஒருவர் மண்டபம் அகதி முகாமில் தமிழக 'கியூ' புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனவரி மாதம் முதல் 434 இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் சென்றுள்ளனர். இவ்வாறு செல்பவர்களிடம் 'கியூ' புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மண்டபம் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டவர்களில் இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின்போது முல்லைத்தீவைச் சேர்ந்த மஹேந்திரன் (வயது-30) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கிளிநொச்சியில் தமிழீழப் போக்குவரத்துக் கழகத்தில் சாரதியாகப் பணியாற்றியவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் ஊடுருவலை தடுக்கவே இவ்வாறான விசாரணைகளை தாங்கள் மேற்கொண்டு வருகிறார்கள் எனப் [illegible]

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி பு.ஆனந்தராசா அவர்களின்
தந்தையின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கட்டுவன்புலம், மகாவித்தியாலயம்,
தெல்லிப்பழை.

(46615)(26-19-45)

## மரண அறிவித்தல்



### ராஜன் தனபால்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனில் வசித்து வந்தவருமான ராஜன் தனபால் 30.01.2006 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் இரத்தினசிங்கம் (தனபாலசிங்கம்)- ஜெயலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் கன்னிகா (கனிமொழி), சுகன்னிகா (அகல்யா), ஜெகன் தனபால், மன்னவன் தனபால், ரமேஸ் தனபால் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிருபா (கலைவாணன்), சோதிதாஸ் (தாஸ்) ஆகியோரின் மைத்துனரும் சுடர்வண்ணன், கலையமுதன் ஆகியோரின் பெரிய மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கிளிநொச்சிப் பொது மயானத்திற்கு நண்பகல் 12 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.1, காவல்பணிமனை ஒழுங்கை,
1-9 கண்டி வீதி,
கிளிநொச்சி.

(சி-47796) (21.26.19.45)

தகவல்:
க.இரத்தினசிங்கம்,
(தனபாலசிங்கம்- தந்தை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை கோட்ட அலுவலகம் இன்று திறப்பு

பருத்தித்துறை, பெப்.11

பருத்தித்துறை கல்விக் கோட்டத்துக்கான புதிய அலுவலகம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.34 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ள திறப்பு விழா நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற மேலதிக கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

மேற்படி கல்விக் கோட்ட அலுவலகம் கடந்த 6வருடங்களாக வட இந்து மகளிர் கல்லூரியில் இயங்கிவந்தது. தற்போது இந்த அலுவலகம் ஓராங்கட்டை ஒழுங்கையில் திறந்து வைக்கப்பட்டவுள்ளது. (3-118-202)

# அரச காணியில் 35 வருடங்கள் குடியிருந்த போதிலும் உத்தியோகபூர்வ ஆவணம் வழங்கப்படவில்லை

## அராலிப் பகுதி மக்கள் முறைப்பாடு

வலி.மேற்கு,பெப்.11

அராலி ஊரத்தியிலுள்ள வலி.மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் சுமார் 35 வருடங்களுக்கு மேலாக குடியிருக்கும் குடும்பங்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்படவில்லை. உத்தியோக பூர்வ ஆவணம் வழங்கப்படவுமில்லை. இதனால், இந்தக் காணியில் குடியிருக்கும் சுமார் 25 குடும்பங்களும் வீடு,மலசல கூடம் போன்றவற்றை நிர்மாணிக்க முடியாமல் அவதிப்படுகின்றனர்.

சுமார் 30 பரப்புக்காணியை 25 குடும்பங்களும் குடிசைகளையமைத்து வேலியடைத்து பராமரித்து வருகின்றனர். 25 குடும்பங்களுக்கும் 30 பரப்புக் காணியையும் பகிர்ந்தளிக்குமாறு பல தடவைகள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையினருக்கு மகஜர்களை கையளித்தும் நிர்வாகத்தினர் நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லையென்று தெரிவிக்கின்றனர்.

மழை காலங்களில் குடிசைகளுக்குள் வெள்ளம் புகுவதனால் தாம் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் அர்ச சார்பற்ற நிறுவனங்கள் வீடுகள், மலசல கூடங்கள் அமைப்பதற்கு முன்வந்தன எனவும் சொந்தமாக காணி இல்லாமையினால் இந்தத் திட்டங்கள் நடைமுறைப் படுத்த முடியவில்லை என்றும் விசனம் தெரிவிக்கின்றனர்.

வலிகாமம் மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர்கள் வருடந்தோறும் சோலை வரியை அறவிடுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அனைவரும் இந்தக் காணியை தமக்கு பகிர்ந்தளிப்பதற்கு முன்வரவேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (3-175)

# உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பமாகியது

அரியாலை,பெப்.11

குடாநாட்டில் பயிரிடப்பட்ட உள்ளூர் உருளைக்கிழங்கு தற்போது அறுவடை செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த முறை குறைந்த நிலப்பரப்பிலேயே விவசாயிகள் உருளைக் கிழங்கைப் பயிரிட்டதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

தற்போது அறுவடை செய்யப்படும் இந்த உள்ளூர் உருளைக்கிழங்கு சந்தைகளில் கிலோ 50 ரூபாவாக விற்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் உருளைக்கிழங்கு நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் கிலோ 70 ரூபாவாக விற்கப்படுவதால், அறுவடை செய்யப்படும் உள்ளூர் உருளைக்கிழங்கின் விலை மேலும் வீழ்ச்சியடையலாம் என்று சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படலாம் என்று கருதப் படுகின்றது. (3-17)



குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையால் நடத்தப்படும் தொழிற்கற்கைநெறிப் பிரிவில் பயின்று வெளியேறும் மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்விலே சான்றிதழ் பெற்ற மாணவிகளையும் குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையின் குரு வண.ராஜன் றோகான் மற்றும் தொழிற்கற்கை நெறிப் பிரிவின் ஆசிரியை எஸ்.சாந்தினி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்: குடத்தனைச் செய்தியாளர்)

## 'திருக்கேதீஸ்வர மாண்மியம்' நூல் வெளியீடு கொழும்பில்

வலி.தென்மேற்கு,பெப்.11

அமரர் இலக்கிய கலாநிதி பண் டிதர் மு. கந்தையா எழுதிய ''திருக்கேதீஸ் வர மாண்மியம்'' என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையினரால் இந்த நூல் வெளியிடப்படவுள்ளது. (3-135)

## கௌரவிப்பு நிகழ்வு

அச்சுவேலி,பெப்.11

ரிஷி காளானில் இருந்து தயாரிக்கப்படும் மருத்துவ உணவுப் பொருள்களை இலங்கையில் சந்தைப்படுத்தும் டீ.எக்ஸ். என்.நிறுவனத்தின் முகவர்கள் உறுப்பினர்களுக்கு ஸ்ரார், ஸ்ரார் ரூபி பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

டீ.எக்ஸ்.என்.நிறுவனத்தின் வர்த்தக முகாமையாளர் செல்வி ஏ.வித்தியா பிரதம விருந்தினராகவும் பிராந்திய முகாமையாளர்களான திருமதி ருக்குமணிதேவி, திருமதி கிரிதரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (3-11)

# முன்பள்ளிச் சிறார்களுக்கு மகிழ்வூட்டல் செயற்பாடு

## • செயல்திறன் அரங்க இயக்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.11

செயல்திறன் அரங்க இயக்க நிறுவனம் முன்பள்ளி சிறார்களுக்கான அரங்கினூடான மகிழ்வூட்டல் செயற்பாட்டை நடத்தி வருகின்றது.

தமது முன்பள்ளிகளில் செயற்படுத்த விரும்புபவர்கள் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

முன்பள்ளிகளில் சிறுவர் விளையாட்டுக்கள், பாடல்கள், ஆடல்கள், நாடகம் நடித்தல், பார்த்தல், தாளங் கொட்டி மகிழ்தல், கதை சொல்லுதல், வேடம் இட்டு மகிழ்தல், வேட முகம் அணிந்து ஆடுதல், பெற்றோர் சிறுவர்கள் கூடிமகிழ்தல் போன்ற அரங்க செயற்பாடுகள் மேற்படி நிறுவனத்தால் இப்போது குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இச் செயற்பாடுகளைத் தமது முன்பள்ளிகளில் செயற்படுத்த விரும்புபவர்கள் ''செயல் திறன் அரங்க இயக்கம், அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி'' என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர். (3-7-202)

## சாவகச்சேரியில் காணிக் கச்சேரி

யாழ்ப்பாணம்,பெப்.11

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம மக்களுக்கான காணிக் கச்சேரி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச செயலர் சே.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ள இக் காணிக் கச்சேரியில் சரசாலை வடக்கு, கோயில் குடியிருப்பு, நுணாவில் மேற்கு, மீசாலை வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கலந்துகொள்வர். (3-202)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வலி . மேற்குப் பிரதேசத்தில் வீடமைக்க 8 கிராமங்கள் தெரிவு

வலி.மேற்கு,பெப்.11

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்திற்குத் தெரிவாகியுள்ள 8கிராமங்களிலும் பயனாளிகளை தெரிவுசெய்யும் பணி ஆரம்பமாகியுள்ளது.

உலக வங்கியின் இரண்டாம் கட்ட வீடமைப்புத் திட்டத்துக்கென மேற்படி பிரதேச செயலர் பிரிவில் செம்பாட்டம் தோட்டம், வேரம், பிள்ளையார் கோயிலடி, முதலி கோயிலடி, பெரியபுலோ, குஞ்சன் கலட்டி, குடாக்கனை, காலையடி ஆகிய 8 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

மேற்படி கிராமங்களிலிருந்து பயனாளிகளைத் தெரிவுசெய்யும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலக திட்டமிடல் பகுதியால் தெரிவுசெய்யப்பட்ட குழுவினர் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று வீடு சேதமதிப்பீட்டுப் படிவங்களை விநியோகித்துவருகின்றனர்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களைக் கொண்டு குடும்ப நிலைமையைக் கருத்தில் கொண்டு பயனாளிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கிராமிய புனரமைப்புக் குழுவின் உறுப்பினர்கள், தொழில்நுட்ப அலுவலர், கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், அபிவிருத்தி உதவியாளர் ஆகியோரைக் கொண்ட குழுவினரே இந்தப் பயனாளிகள் தெரிவை மேற்கொள்ளவுள்ளனர். எதிர்வரும் 18ஆம் திகதி வரை பயனாளிகள் தெரிவு இடம்பெறவுள்ளது. (3-175-202)

# கட்டடப் பணிகள் நிறுத்தம் கிறேசர் நிலையங்கள் பாதிப்பு

அரியாலை,பெப்.11

கோப்பாய், நீர்வேலி, புத்தூர் போன்ற பகுதிகளில் உள்ள கல் உடைக்கும் கிறேசர் நிலையங்களில் சல்லிக் கற்கள் விற்பனை இன்றி தேக்கம் அடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையால் கட்டட கட்டுமாணப் பணிகளை மேற்கொள்வதற்கு மக்கள் பின்னடித்து வருவதாலே கட்டடப் பொருள்களின் விற்பனை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் மேற்படி கல்லுடைக்கும் கிறேசர் நிலையங்களில் சல்லிக் கற்கள் விற்பனை இன்றித் தேங்குவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (3-17)



யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தால் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய நூலகத்திற்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியுதவியை சுவிஸ் நாட்டைச் சேர்ந்த தந்தை பீற்றர் மனோகர் வழங்கியுள்ளார். றோட்டேரியன் அ.பஞ்சலிங்கம் பாடசாலைக்கான புத்தகங்களைக் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம். (3-203)

# வயோதிபர் விவரம் திரட்டும் பணி முழு அளவில் ஆரம்பம்

வலி.மேற்கு,பெப்.11

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

பிரதேச செயலக சமூகசேவை அலுவலர் என்.இராஜமனோகரன் இதற்கான பணிகளை முழு அளவில் ஆரம்பித்துள்ளார்.

60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு வினாக்கொத்து குறிப்பிடப்பட்ட படிவங்கள் வழங்கப்பட்டு விவரங்கள் திரட்டப்படுகின்றன.

வினாக்கொத்தில் ஆரோக்கிய நிலை, உதவி உபகாரம் கிடைக்கின்றதா? மேற்கொள்ளும் பணிகள், பகுதி நேரத்திற்கு தொண்டர் சேவைக்கு செல்லமுடியுமா?, பகல் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்லமுடியுமா? போன்ற வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன. இத்துடன் அவசரமாகத் தேவைப்படும் ஐந்து உதவிகளைக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (3-175)

## புராணப் படிப்பு பூர்த்தி

சுழிபுரம்,பெப்.11

சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நடைபெற்று வரும் கந்தபுராணப் படிப்பு பூர்த்தி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

கந்தபுராண ஏடுகள் தேரில் வைக்கப்பட்டு வீதியுலா கொண்டு செல்லும் நிகழ்வு இடம்பெறும்.

வருடாவருடம் இந்த ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு நடைபெறுவது வழமையாகும். (3-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## கிளைக்குழுத் தெரிவுக்கான அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2005.11.11 ஆம் திகதி 1419 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு மேற்படி சங்கத்தின் துணை விதி 23 இன் ஏற்பாட்டின் படி வடக்கு-கிழக்கு மாகாணக்கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களால் ஆக்கப்பட்டு 19.05.1998 ஆம் திகதி 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ''வடக்கு- கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்'' இன் ஏற்பாடுகளுக்கு அமைய தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் எல்லாக்கிளைகளுக்குமான கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக்கூட்டங்களை நடத்துவதற்காக மேற்படி விதிகளின் பிரிவு 6 இன்படி அக்கூட்டங்கள் நடைபெறுவதற்கான கால அட்டவணைகள் பின்வருமாறு என்னால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி உப விதியின் பிரிவு 7 இன்படி அக்கூட்டங்களை அழைப்பதற்கும் அதன் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களுக்கு அதிகாரம் அளித்து நியமித்துள்ளேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த அறிவித்தல் தொடர்பாக ஒவ்வொரு கிளையின் பொதுச்சபைக்கு வந்து வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் அனேகமான அங்கத்தவர்கள் இடப்பெயர்வு காரணமாக வேறு இடங்களில் வசிப்பதால் இந்த அறிவித்தலை தமக்கு வழங்கப்பட்ட தனித்தனி அறிவித்தலாக ஏற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட தங்களது கிளைக்குரிய கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து கிளைப் பொதுச்சபைக்கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

| 12.02.2006 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10மணி | 12.02.2006 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.1மணி | கிளைப்பொதுச்சபைக் கூட்டத்தின் தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைநடத்தப்படும் இடங்கள் |
|---|---|---|---|
| கிளை.01 தெல்லிப்பழை | கிளை. 09 கீரிமலை | ப. கிருஸ்ணபவானி | பிரதேச செயலகம், வலிவடக்கு, தெல்லிப்பழை |
| கிளை.12 மாவிட்டபுரம் | கிளை.13 அரசடி வீதி, மாவிட்டபுரம். | க. சித்திரகுமாரி | பிரதேச செயலகம், வலிவடக்கு, தெல்லிப்பழை |
| கிளை.14 கொல்லங்கலட்டி | கிளை.41 கிரானை. | இ.பாலச்சந்திரன் | பிரதேச செயலகம், வலிவடக்கு, தெல்லிப்பழை |
| கிளை.02 துர்க்காபுரம் | கிளை.25 மயிலிட்டி கிழக்கு | வி.யோகேஸ்வரி | பிரதேச செயலகம், வலிவடக்கு, தெல்லிப்பழை |
| கிளை.28 பளை வீமன்காமம் | கிளை 29 வீமன் காமம் | இ.இராசரத்தினம் | பிரதேச செயலகம், வலிவடக்கு, தெல்லிப்பழை |
| கிளை.30 தையிட்டி | கிளை.31 ஊறணி | க.ஜெயந்தன் | பிரதேச செயலகம், வலிவடக்கு, தெல்லிப்பழை |
| கிளை.35 கலட்டி | கிளை 38 மாங்கொல்லை | த.மாலினி | பிரதேச செயலகம், வலிவடக்கு, தெல்லிப்பழை |
| கிளை.33 மடத்தடி | | ச. பாலகுமார் | பிரதேச செயலகம், வலிவடக்கு, தெல்லிப்பழை |
| கிளை.27 காங்கேசன்துறை | கிளை.26 மயிலிட்டி வடக்கு | க.திசாகரன் | பிரதேச செயலகம், வலிவடக்கு, தெல்லிப்பழை |
| கிளை.34 ஆஸ்பத்திரியடி தெல்லிப்பளை | கிளை.37 ஊராங்குனை | க.கமலநாதன் | பிரதேச செயலகம், வலிவடக்கு, தெல்லிப்பழை |
| கிளை.44 மயிலங்கூடல் | கிளை.08 இளவாலை | சி.சண்முகநாதன் | யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் |
| கிளை.36 வசந்தபுரம் | கிளை.07 கருகம்பனை | க.சசிகரன் | யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் |
| கிளை.43 சீந்திப்பந்தல் | | கு.உருத்திரசிங்கம் | சீந்திப்பந்தல் கிளை 43 இன் கட்டடம் இளவாலை |
| கிளை.03 வவுணாவத்தை | | ஜே.குமுதாயினி | கிளை 03 இன் கட்டடம் வவுணாவத்தை |
| கிளை.04 விராங்கொடை | கிளை.06 விழிசிட்டி | வி.கே. அருந்தவநாதன் | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள நடேஸ்வராக்கல்லூரி மண்டபம் |
| கிளை.05 பன்னாலை | | வி.மகேஸ்வரன் | கிளை 05இன் கட்டடம் பன்னாலை |
| கிளை.10 காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையடி | கிளை.11 காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியடி | பொ.மோகன் | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள நடேஸ்வராக்கல்லூரி மண்டபம் |
| கிளை.16 கட்டுவன் | கிளை.15 வறுத்தலை விளான் | இ.தயாகரன் | துர்க்காபுரத்தில் அமைந்துள்ள நடேஸ்வராக்கல்லூரி மண்டபம் |
| | கிளை.42 திருப்பூர் மயிலிட்டி | சி.குணாளன் | மயிலிட்டி கடற்றொழிலாளர் கூ.ச. மண்டபம், எரிந்த அம்மன் கோயிலடி வியாபாரி மூலை பருத்தித்துறை. |
| | கிளை.24 மயிலிட்டி கரை | அ.தயாளன் | மயிலிட்டி கடற்றொழிலாளர் கூ.ச. மண்டபம், எரிந்த அம்மன் கோயிலடி வியாபாரி மூலை பருத்தித்துறை. |
| | கிளை.32 பலாலி சந்தி | என்.பத்மசோதி | மயிலிட்டி கடற்றொழிலாளர் கூ.ச. மண்டபம், எரிந்த அம்மன் கோயிலடி வியாபாரி மூலை பருத்தித்துறை. |
| கிளை.19 ஒட்டகப்புலம் | கிளை 22 பலாலி மத்தி | ஐ.நாகேஸ்வரன் | யா/ஆவரங்கால் மகாஜனவித்தியாலயம் |
| கிளை.21 பலாலி மேற்கு | கிளை.23 பலாலி கிழக்கு | இ.புவன்ராஜ் | யா/ஆவரங்கால் மகாஜனவித்தியாலயம் |
| கிளை.39 குட்டியப்புலம் | கிளை.40 குரும்பசிட்டி கிழக்கு | சு.கணேஸ் | வசாவிளான் கிழக்கு குட்டியப்புலம் கிளை 39 |
| கிளை.20 வசாவிளான் மத்தி | | T.N. ராஜா | வசாவிளான் கிழக்கு குட்டியப்புலம் கிளை 39 |
| கிளை.17 குரும்பசிட்டி | கிளை.18 வசாவிளான் | அ.ஜேம்ஸ்மேஷன் | வசாவிளான் மகாவித்தியாலயம் உரும்பிராய் |

*24.01.2006*

*பொ. சிவலிங்கம்,*
*கூ.அ.உ. ஆணையாளர், யாழ்ப்பாணம்.*

**குறிப்பு: 1 கிளைக்குழுத் தொடர்பான முக்கிய விதிகள்:**

- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02) 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்து திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்கள் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன், சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்துமூலம் அறிவிப்பார்.

**கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படத் தகுதி அற்றவர்கள்.**

1. கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
2. 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள்.
3. உடன் முன்சென்ற 03 ஆண்டுகளுள் தீய ஒழுக்கச் செயலுக்காக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவர். அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்கு தீர்ப்பளிக்கப்பட்டவர்.
4. கடனைத் தீர்க்க வகையற்றவர் எனப் பிரகடனம் செய்யப்பட்டவர். அல்லது அவ்வாறொரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டவர்.
5. இச்சங்கத்திற்கு அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு எக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் எக்கடனையாவது திருப்பிக்கொடுக்காதவர் அல்லது வேறு எந்த விதத்திலும் தவறு செய்தவர்.
6. இச்சங்கத்தில் வியாபாரி எனப் பதிவு செய்யப்பட்டவர். அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்ட வகையில் ஒரு வியாபாரத்தை நடத்துபவர்.
7. சங்கத்தில் ஆதாயங்கருதி ஏதாவதொரு பகுதியை அல்லது இடத்தினை வகிப்பவர். அல்லது ஆணையாளரின் முன் அனுமதியின்றி ஏதாவது தகைமைக் கொடையைப் பெறுபவர்.
8. இச்சங்கத்தில் அல்லது இச்சங்க உறுப்புரிமை வகிக்கும் வேறு எந்தச் சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராக இருப்பவர்.
9. ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினால் செய்யப்படும் எந்த விற்பனையிலோ, கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்டு அதனால் செய்யப்படவிருக்கும் அல்லது பேச்சளவில் இருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் மறைமுகமாகவோ நேர்முகமாகவோஅக்கறை கொண்டிருப்பவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கு அமைய தமது பதவியை அல்லது வேலையை கடந்த 05 ஆண்டுகளில் விட்டகலவேண்டிய நிலைக்கு ஆளானவர்.
11. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள்.
12. அங்கத்தவராக சேர்ந்து ரூபா 100.00ஐப் பங்குப்பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் , அங்கத்வராக சேர்ந்தும் ஒரு வருடம் பூர்த்தியாகதவருமான ஒருவர்.
13. இயக்குநர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாத அல்லது மேல்முறையீடு இயக்குநர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் பிரிவு 6(2) இன் கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது விதியின் 2:4 அல்லது 2:6 இன் கீழ் வாக்காளர் அட்டவணையில் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.

[சங்கத்தின் துணைவிதிப்பிரிவு இல.22(1)]

(சி-47764)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெயபுரம் அ.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி

பரந்தன்,பெப்.11

ஜெயபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

திருமதி ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளையும் கலந்து கொண்டனர். (த-352-202)

## பயிற்சிப் பட்டறை

ஒட்டுசுட்டான்,பெப்.11

'எக்கோ' சேவா லங்கா மன்றத்தின் நிதி உதவியுடனும் முல்லை பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரணையுடனும் நீர்க் குழாய் பொருத்தல், கட்டட நிர்மாணம், தச்சுவேலை ஆகிய வேலைகளுக்கான பயிற்சிப் பட்டறை கடந்த 27ஆம் திகதி முல்லை. தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் க.வைரமுத்து தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கள விளக்கினை பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றப் பணிப்பாளர் சுகுணன், பணிப்பாளர் சுந்தரமூர்த்தி, சேவாலங்கா மன்ற இணைப்பாளர் கங்கேஸ், பயனாளிகள் சார்பில் பாஸ்கரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

கருத்துரைகளை சேவா லங்கா மன்ற இணைப்பாளர் கங்கேஸ் பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர் வழங்கினர்.

இதில் பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்பட்ட பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர். (த-341)



முழங்காவில் மகா வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றது.

விழாவில் மாணவர்கள் மாலை அணிவித்து அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி

கிளிநொச்சி,பெப்.11

யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்ந்துவரும் குடும்பங்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றது.

அக்கராயன் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பராமரிப்பில் அக்கராயன் சுபாஸ் குடியிருப்பில் வாழும் குடும்பங்களுக்குப் படுக்கை விரிப்புகள், நில விரிப்புகள், சமையல் உபகரணங்கள் உட்படப் பல்வேறு அத்தியாவசியப் பொருள்கள் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து வாழ்ந்துவரும் குடும்பங்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்காலிக வீடுகள், கொட்டகைகள் அமைத்துக் கொடுத்ததுடன், அத்தியாவசியப் பொருள்களையும் வழங்கியது. (த-323-352-202)

## முள்ளியவளைச் சந்தையில் பெரும் இடநெருக்கடி

முள்ளியவளை பொதுச் சந்தை பெரும் இடநெருக்கடிக்கு மத்தியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிவருகின்றது.

சந்தையின் உட்பகுதியில் கிரவல் மணல் போடப்பட்டு சீராக்கப்பட்டுள்ளது. வியாபாரிகள் அங்கு மரக்கறிகளை வைத்து வியாபாரம் செய்வதால் தூசுகள் மரக்கறிகளில் படிகின்றன. இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (த-352-202)

## பொருளாதார அபிவிருத்தி குழுக்களுக்கு ஊக்குவிப்பு

கிளிநொச்சி,பெப்.11

கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் சமூகப் பொருளாதார அபிவிருத்திக் குழுக்களுக்கான ஊக்குவிப்பு வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவன மண்டபத்தில் இடம்பெற்றது.

'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத் தலைவர் ராமச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்புரைகளை கிராம அலுவலர் அருந்தமிழ்ச்செல்வன், யூனியன்குள சமூக, பொருளாதார அபிவிருத்திக் குழுத் தலைவர் உதயகுமார், நல்லையா ஆகியோர் நிகழ்த்தினர்.

யூனியன்குள சமூகப் பொருளாதார அபிவிருத்திக் குழுக்கான ஊக்குவிப்பாக காசோலையும் கோணாவில் காந்தி கிராமம் ஆகிய கிராமங்களின் சமூக, பொரு ளாதார அபிவிருத்திக் குழுக்களுக்கான ஊக்குவிப்பாகக் கதிரைகளும் வழங்கப்பட்டன. (த-202)

## ஊற்றுப்புலத்தில் பயிற்சி

பரந்தன்,பெப்.11

ஊற்றுப்புலம் கிராம மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி கடந்த மாதம் 28ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பயிற்சியை பயிற்சி ஆசிரியர் கண்ணன் வழங்கிவருகின்றார். வாரத்தில் இரண்டு நாள்கள் பயிற்சி இடம்பெற்று வருகின்றது. (த-352-203)

## மரதன் ஓட்ட நிகழ்வு

பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் 2006ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வன்மை திறனாய்வை முன்னிட்டு ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்ட நிகழ்வு கடந்த 8ஆம் திகதி புதன் கிழமை நடத்தப்பட்டது. (த-403)



பூநகரி ப.நோ.கூ. சங்கத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கான சேவைநலன் பாராட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் சங்கத்தலைவர் எஸ்.கார்த்திகேசு உரையாற்றுவதையும் பொதுமுகாமையாளர் து.இரத்தினசிங்கம், பூநகரிப் பிரதேச செயலர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார், நெறியாளர் குழு உறுப்பினர் த.தயாரூபன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் கௌரவிக்கப்பட்ட பணியாளர்களையும் தற்போதைய பணியாளர்களையும் இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: பூநகரிச் செய்தியாளர்)

# புளியங்குளம் - சேமமடு வீதி சேதம்; பஸ்சேவை நிறுத்தம்

புளியங்குளம்,பெப்.11

புளியங்குளம் - பன்றிக்கெய்தகுளம் - சேமமடு - இளமருதங்குளம் வரையான பிரதான வீதி மிகவும் சேதமடைந்துள்ளது. இதனால் பஸ் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த வீதியூடாக நடத்தப்பட்டு வந்த தமிழீழப் போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்துச் சேவை, பாதை சீரில்லாத காரணத்தால் 2 மாதங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (த-355-202)

# வவுனியாவில் வாகனங்களுக்கான வரிப்பத்திரம் பெறுவதில் சிரமம்

### வாகன உரிமையாளர்கள் விசனம்

வவுனியாவில் வாகனங்களுக்கான வரிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் 14 ஆயிரம் வாகனங்களுக்கு வரிப்பத்திரங்கள் வழங்கப்படவேண்டியுள்ளது.

இந்நிலையில் நாள் ஒன்றுக்கு 100 - 150 வரையானவர்களுக்கே வரிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. ஆளணிப் பற்றாக்குறையே இந்நிலைக்குக் காரணம் என அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வாகன வரிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியாமையால் பொலீஸாரின் வீதிச் சோதனையின் போது தண்டப்பணம் கட்டவேண்டிய நிலை உள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (த-202-164)

# மகளிர் கிராமப்படைப் பயிற்சி பனிக்கநீராவியில் ஆரம்பம்

வவுனியா, பெப் .11

பெண்களுக்கான கிராமப்படைப் பயற்சியின் ஆரம்ப வைபவம் கடந்த திங்கள்கிழமை பனிக்கநீராவி முன்பள்ளியில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆவர்த்தனா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரை புளியங்குள பிரதேச பொறுப்பாளர் நவநீதன் ஏற்றினார். தேசியக் கொடியைப் பயிற்சிப் பாசறை நிர்வாகப் பொறுப்பாளர் செழியன் ஏற்றினார் 2ஆம் லெப்.மாலதியின் உருவப்படத்திற்கான ஈகச் சுடரை மாதர் சங்கத்தலைவி தி.கிருஷ்னா ஏற்றி வைத்தார்.

மேஜர் யாளினி பயிற்சிப் பாசறை ஆசிரியர்களான இளநிலா, வளர்நிலா ஆகியோர் பயிற்சியை ஆரம்பித்து வைத்தனர். (த-164-202)

# கோணாவிலில் இன்று முதல் பொதுச் சந்தை இயங்கும்

பரந்தன், பெப்.11

கரைச்சிப் பிரதேச சபையினரால் கோணாவில் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுச் சந்தை இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் இதுவரை காலமும் பொதுச்சந்தை ஒன்று இல்லாததால் கிராம மக்கள் அக்கராயன் பொதுச்சந்தைக்கே அன்றாடம் சந்தை நடவடிக்கைகளுக்காகச் செல்ல வேண்டியிருந்தது. தற்போது இப் பொதுச்சந்தை அமைக்கப்பட்டதால் மக்கள் பெரும் நன்மையடைவர் என எதிர்க்கப்படுகின்றது. (த-352-202)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்லை

# குறைந்த கட்டணத்தில் விவசாய உபகரணங்கள்

### ஒட்டுசுட்டான் கமநல நிலையம் வழங்குகிறது

ஒட்டுசுட்டான்,பெப்.11

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தினர் விவசாயிகளின் நன்மை கருதி அறுவடை இயந்திரம், உழவு இயந்திரம், கிருமிநாசினி தெளிக்கும் தெளிகருவிகள் என்பவற்றைக் குறைந்த கட்டணத்தில் சேவையில் ஈடுபடுத்த முன்வந்துள்ளனர்.

இதனால், நன்மையடைய விரும்பும் விவசாயிகள் தத்தமது கமக்கார அமைப்புப் பிரதிநிதிகளுடன் தொடர்புகொண்டு இவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனக் கமநல சேவைப் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

விதைநெல், காய்கறி விதைகள் போன்றவற்றினைப்பெற்றுக்கொள்ளவும் முற்கூட்டியே கமக்கார அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு பதிவுசெய்தால் கமநலசேவை நிலையத்தில் அவற்றைப் பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (த-341)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
கணபதி துணை

**சங்கானை**
**செங்கற்படை மகாதேவப் பிள்ளையார்**
**தேவஸ்தானம்**



**சித்திரத்தேர் அமைப்பிற்கான**
**ஆரம்ப வைபவம்**



**இடம்:** சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தான தேர் மண்டபம்
**காலம்:** 11-02-2006 சனிக்கிழமை - நண்பகல் 12 மணி முதல் ஒருமணி வரையிலான மகேந்திர முகூர்த்த சுபவேளை
(பார்த்திப வருடம், தைத்திங்கள் 11ஆம் நாள் -தைப்பூசத் தினம்)

**தேர் அமைப்பு:**
சிற்பாசாரியார் எஸ்.ஜெயகாந்தன் - (ஜெனா சிற்பக் கலைக்கூடம், கொழும்பு)

சிவநேயச் செல்வர்களே!

இவ் வைபவத்தில் அன்பர்கள், அடியார்கள் அனைவரும் பங்குகொண்டு தேர் அமைப்புத் திருப்பணிக்காக தங்களால் இயன்ற பொருளுதவி வழங்கி, ஆனை முகன் அருள்பேறு பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமதி செ.நாகராசா** – ஆலய அறங்காவலர்.
**திரு.ந.இராசா** – செயலாளர்.
**திரு.கு.பாலசுப்பிரமணியம்** – பொருளாளர், தேர்த் திருப்பணிச் சபை.

(46603)(26-32-19-45)

## சாவகச்சேரி பிரதேச சபையால் 40 மயானங்கள் புனரமைப்பு

சாவகச்சேரி,பெப்.11

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட மயானங்களைப் புனரமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட உப அலுவலகங்களான நாவற்குழி, கைதடி, சரசாலை, மிருசுவில், கச்சாய் உள்ளிட்ட பகுதி களில் உள்ள 40 மயானங்களை செப்பனிட நடவடிக்கை எடுத்துள்ளதாக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த மயானங்களில் உள்ள கிணறு மற்றும் மடங்களின் விவரங்கள் திரட்டப் பட்டு வருகின்றன.

இவை பொதுமக்களின் நலன்கருதி செப்பனிடப்படவுள்ளன. (3-31)

## மீளாய்வுக் கோரிக்கைகளை சமர்ப்பிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.11

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட கிராம சேவகர்கள் சமுர்த்தி மீளாய்வுக் கோரிக்கைகளைப் பொருத்தமான சிபார்சுகளுடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (3-202)

**அழைப்பு**

**IIS CITY CAMPUS**

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் தை மாதம் 29ம் நாள் (இன்று 11.02.2006 சனிக்கிழமை) காலை 8.00 மணி தொடக்கம் 9.00 மணி வரையுள்ள சுப வேளையில்
IIS CITY CAMPUS
புதிய வளாகத்தினை திறந்து வைக்கவுள்ளோம் அத்தருணம் மாணவர்கள், பெற்றோர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முன்னைய முகவரி:
#181, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இயக்குநர்
IIS City Campus
#200, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

கம்யூட்டர் எக்ஸ்பிரசின் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

**Diploma in Video Mixing**

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் Video Editing தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- *13/02/2006 :- 08.30*

**இராஜமாணிக்கம்**
**கல்யாண மண்டபம்**

மக்களின் சேவை சிறக்க அமைந்த

**ஒரு மகுட மண்டபம்**

இன்று (11.02.2006) சனிக்கிழமை
திறந்து வைக்கப்படுகிறது.
வீடியோ கலாமினி அன்பர்களின்
உள்ளத்தில் உதித்த சேவை
மனப்பான்மையாலே உயர்ந்து
நின்று மக்களின் பெருவிருப்பைப்
பூர்த்தியாக்கி அனைவரையும் உளம்
மகிழ வைக்கும் ஒரு மண்டபம்.
இது சிறப்புற
இனிது வாழ்த்துகிறோம்.

**புலவர் வீடியோ நிறுவனத்தினர்,**
கோண்டாவில்.

(46622)(32-19-45)

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

கம்யூட்டர் எக்ஸ்பிரசின் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி கணக்கியல் துறையில் ஆர்வமுள்ளோரிற்கான ஒருவாரகால முழுநேர கணனிக் கணக்கியல் கற்கைநெறி.

**Diploma in Computerized Accounting**

**Accpac+Quick Books Pro+Tally**

ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

**Course Contents**
- Introduction to Computer
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- Fore Casting
- Business Planing
- Internet & e-mail

Course Fee:- 3500

யாருக்கு:-
கணக்கியல் துறையில் (அரச,தனியார்,N.G.O) வேலைசெய்துகொண்டிருப்போருக்கும், வெளிநாட்டில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கும்,பல்கலைக்கழக மாணவர்கள்,உயர்தொழினுட்பக் கல்லூரி மாணவர்கள், ஏனைய கணக்கியல்துறையில் கற்றுக்கொண்டிருப்போர் அனைவருக்கும்

நன்மைகள்:-
- வெளிநாட்டு,உள்நாட்டு வேலைவாய்ப்புக்களை இலகுவாகப் பெறலாம்.
- 100% தொழில்சார்ந்த பயிற்சிநெறி
- தகமை, அனுபவம் வாய்ந்த போதனாசிரியர்கள்.
- Free Study Pack
- 100% செய்முறைப் பயிற்சிகளிற்கான உத்தரவாதம்
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம் :- **20/02/2006**

*Computerized Accounting*
3 மாதகால கற்கைநெறி 26/02/2006 அன்று ஆரம்பிக்கப்படும்.

ஏனைய அனைத்து கணனிக்கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 12/02/2006 அன்று ஆரம்பமாகின்றது.

*நீங்காத நினைவுகளில் ஏழாண்டு*

அன்னை மடியினில் 24 - 03 - 1952



ஆண்டவன் அரவணைப்பில் 11 - 02 - 1999

**திருமதி**
**மரி கேமின் சுலோஜனா ஜோசப்**

பாசமும், பண்பும் கலந்த எம் இனிய
பாச ஒளியே, எம்மையெல்லாம்
தவிக்கவிட்டுச் சென்று
ஆண்டுகள் ஏழு சென்றாலும்
புன்னகை தவழும் அன்பு வதனம்
கண்முன்னே காட்சி தருகின்றதம்மா!
உன் ஆன்மா இளைப்பாற
ஆண்டவன் திருப்பாதத்தில் வேண்டுகின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
**கணவர், பிள்ளைகள்,**
**பெற்றோர், சகோதரர்கள்,**
**உற்றார், உறவினர்கள்.**

கி.ச.அல்போன்சஸ்,
பொற்தி ஒழுங்கை,
பண்டத்தரிப்பு.

(46564)(32-19-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முகம்



பலாலி ஆசிரிய கலாசாலையின் புதிய அதிபராக தம்பியப்பா காங்கேசபிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாசாலையின் அதிபராக கடமையாற்றிய கு.சதாசிவமூர்த்தி ஓய்வுபெற்றதனை அடுத்து அவரது இடத்திற்கு கலாசாலையில் உப அதிபராகக் கடமையாற்றிய த.காங்கேசபிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். உப அதிபராக சு.கனகநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள் இருவரும் தமது பதவிகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளனர். (த-6)

★★★ ★★★ ★★★



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சௌந்தரலிங்கம் யாழ். பல்கலைக்கழகத்தில் பொருளியல்துறையில் முதுதத்துவமாணி (M.Phil) கற்கை நெறியினைப் பூர்த்தி செய்துள்ளார். அண்மையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இவர் இதற்கான பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார்.

பருத்தித்துறை, அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் தம்பதிகளின் புதல்வரான இவர், தனது ஆரம்பக் கல்வியை யாழ். சென். றோக் வித்தியாலயத்தில் பயின்றார். பின்னர் யாழ்.மத்திய கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்து அங்கிருந்து யாழ்.பல்கலைக் கழகத்திற்கு அனுமதிபெற்றார்.

1979 இல் தனது முதலாவது பட்டத்தைப் பெற்ற இவர், தொடர்ந்து அதே பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையில் பட்ட மேற்படிப்பு டிப்ளோமா, பொது நிர்வாகத் துறையில் பட்ட மேற்படிப்பு டிப்ளோமா என்பவற்றையும் பூர்த்திசெய்தார்.

கிளிநொச்சி, யாழ். மாவட்டங்களில் இலங்கை ஆசிரியர் சேவையிலும் பின்னர் இலங்கை அதிபர் சேவையிலும் பணியாற்றிய இவர், தற்போது கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பொருளியல்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் துறைத் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார். (3)


★★★ ★★★ ★★★



கணபதிப்பிள்ளை சாமிநாதபிள்ளை இராஜ்குமார் சமாதான நீதிவானாக வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் வவுனியா, பாவற்குளம் கலைமகள் வித்தியாலய அதிபரும், வவுனியா சூசைப்பிள்ளையார்குளக்.கிராம அபிவிருத்திச் சங்கச் செயலவை உறுப்பினரும் ஆவார்.

திருகோணமலை புனித பிரான்ஸிஸ் சவேரியார் ம.வி., திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், காலஞ்சென்ற சாமிநாதபிள்ளை அருந்தவமாணிக்கத்தின் புதல்வரும் ஆவார். (3)



சமூகப் பற்றாளர் அமரர் சி.வி.சின்னத்தம்பியின் நினைவுப் புலமைப்பரிசில் நிதியத்தின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் மானிப்பாய் கிழக்கு செல்வ பவனத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் புலமைப்பரிசில் நிதியத்தை அமரரின் மகன் சி.செல்லத்துரை புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பொருளாளர் சி.நாகேஸ்வரனிடம் கையளிப்பதையும் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத்தலைவர் பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன் மற்றும் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (3-204)

# நூல் வரிசை



நூல் : **குழந்தைப்பாடல்கள்**
ஆசிரியர் : **ஆடலிறை**
வெளியீடு: **யாழ். இலக்கிய வட்டம்**

ஆடலிறை - திருஞ்செந்தூரன் - பொய்கையார் - செந்தூரன் ஆகிய புனை பெயர்களுடன் படைப்பு இலக்கியத்துறையில் ஈடுபட்டு வருபவர் மயலங்கூடலூர் பி.நடராசன்.

ஈழத்துப் பதிப்பு மற்றும் தொகுப்பு முயற்சிகளில் இவரது பங்களிப்பு விதந்து குறிப்பிடத்தக்கது. இலக்கிய உலகில் பன்முக ஆளுமையுடன் திகழும் குழந்தை இலக்கியம் என்ற துறையில் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் செயற்பட்டுவந்துள்ள அவரின் அனுபவத்தின் கனியாக நமக்குக் கிடைக்கும் முக்கிய படைப்பாக்கம் ''ஆடலிறை குழந்தைப் பாடல்கள்''. இவரின் கைவண்ணத்தில் உருவான இந்நூலினை எடுத்து நோக்கும்பொழுது அறிவு தெளிந்த நிலைமையில் எளிமை தானே கைவரும் என்பதற்கு இந்த நூல்கள் சிறந்த சான்றாக உள்ளன. நூலாசிரியரின் ஆழ்ந்த தமிழ் அறிவும் கற்பித்தல் அனுபவ முதிர்ச்சியும் உளவியல் அறிவும் பிறவும் இந்நூல்களில் பளிச்சென்று தெரிகின்றன.

எளிமையான தமிழ்ச் சொற்களிலே அமைந்துள்ள ஒவ்வொரு பாடலும் பிள்ளைகளுக்குக் கதையூடாக ஒரு நல்ல செயற்பாடுகளையும் நல்ல ஒழுக்கவியற் கருத்தினையும் முன் வைக்கின்றார். பிள்ளைகளுக்குச் சென்ற காலப் பழுதில்லாத்திறன்களையும் நிகழ்கால நல்ல நிகழ்வுகளையும் உண்மை நிலைகளையும் கொடுமைகளையும் பாடல்களூடாக ஆசிரியர் உணர்த்துகின்றார் . பல்வேறு சந்தங்களிலே ஆசிரியர் பாடல்களை அமைத்துள்ளார். சந்தத்துடன் பொருள்சுவையும் சேருகின்றது. குழந்தைகளின் இயற்கையீடுபாடு, விளையாட்டுக்கள், சூழல்சார் விலங்குகள் மற்றும் பறவைகளின் மீதான ஈடுபாடு, குடும்ப உறவு நிலைகள், சமய ஈடுபாடு முதலியன சார்ந்த பாடல்களின் தொகுப்பாக இது அமைந்தது. இலக்கியம் என்ற வகையிலும் கல்வி சார் ஆக்கம் என்ற வகையிலும் சிறப்பான கவனிப்புக்கும் கணிப்புக்கும் உரியது. குழந்தைகளின் உளப்பாங்கிற்கேற்ற வகையில் அவர்களது அனுபவ வட்டத்தைக் கருத்துக் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் அறிவு வளர்ச்சி மற்றும் தகவல் நோக்கிய மன விரிவு என்பற்றுக்கு ஏற்ற வகையில் அறிவியல் தொடர்பான பாடல்களும் புனைந்தமைக்கப்பட்டுள்ளன. பண்பாட்டுணர்வுகளை முதன்மைப்படுத்தும் வகையில் சமுதாயப் பெரியோர் பற்றிய கதைகள் பல்வேறு அற நிலைகளைப் பேசும் குட்டிக்கதைகள் என்பனவும் பாடல்கள் வடிவில் இத்தொகுப்பில் பதிவாகியுள்ளன. இவ்வகையில் குழந்தை இலக்கியத்துக்குத் தேவையான உள்ளடக்கப் பரப்பில் ஒரு நிறை நிலையை இந்நூல் கொண்டுள்ளது.

நயினை கி.கிருபானந்தா

# நீத்தார் நயப்புரை

## ஆசிரியராக, செய்தியாளராக சமூகத்தொண்டுபுரிந்த சர்மா



தந்தைவழி மைந்தன் என்று சொல்லுவார்கள். அந்தநிலையில், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் வடமொழி, தென்மொழி ஆசிரியராகத் திகழ்ந்த பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருக்களின் இளைய மைந்தனே அமரர் பரிபூரணானந்த சர்மா ஆவார். தந்தை, தாயாரின் பிற்கால வாழ்வில் அவர்களை நன்கு பரிபாலித்தவர். பெற்றோரின் ஆசீர்வாதத்தாலும் குலதெய்வமான உடுவில் கற்பொக்கணை பிள்ளையாரின் திருவருளாலும் இளமை தொடக்கம் படிப்படியே உயர்ந்துவந்தார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளில் தளராது நிலைகொண்ட சர்மா அவர்கள் வீட்டில், பாடசாலையில், ஆசிரிய சமூகத்தில், உற்றார், உறவினர்கள் மட்டுமன்றி மற்றெல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகியவர். தந்தையாரது விருப்பத்தின்படி தானோர் ஆசிரியராகப் பணிபுரிய வேண்டுமென இளமையிலேயே அச்சிந்தனையை ஆக்கிக் கொண்டார். ஆரம்பக் கல்வியை உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் தொடங்கி மேல் வகுப்புகளை கந்தரோடை ஸ்கந்தவரோதயத்தில் நிறைவேற்றினார். பத்திரிகைத் தொழிலிலும் விருப்பமானபடியால் 1963ஆம் ஆண்டுமுதல் 'ஈழநாடு' பத்திரிகையில் கடமை புரிந்தார். அந்தளவில் நில்லாது, கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் [1965-67] படித்து வர்த்தக தராதரம் பெற்றுக்கொண்டார். நான்கு ஆண்டுகள் அத்தராதரத்துடன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்பித்ததன் பின் 1969-70 காலப்பகுதியில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று வெளியேறினார். அதன் பின் மாத்தளையிலும் வேறு கல்லூரிகளிலும் சேவை செய்தபின் 1982இல் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் தனது சேவையைத் தொடர்ந்தார்.

அக்கல்லூரியில் சுமார் 10 ஆண்டுகள் அதிபர், ஆசிரியர், பெற்றோர் பிள்ளைகளின் பாராட்டுக்குரியவராயிருந்து கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் ஓய்வுபெறும் வரை ஆசிரியராக, பகுதித் தலைவராக சேவை செய்தார். அங்கே ஆசிரியர் கழகத் தலைவராகவும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராகவுமிருந்து சிறந்த தொண்டாற்றினார். மாணவச் செல்வங்கள் மகிழ, ஆசிரியர், அதிபர் மகிழ தொண்டுசெய்த சர்மா அவர்கள், 2002 ஆம் ஆண்டு ஆடியில் ஓய்வுபெற்றார். சர்மா அவர்களிடம் அதிபர், ஆசிரியர் வைத்த அன்பினாலே அவர் ஓய்வுபெற்றபோது பெரிய விமரிசையாகக் கலைநிகழ்வுகள் வைத்துப் பாராட்டினர்.

இவர் ஆசிரியர் தொழிலுடன் மட்டும் நின்றுவிடாது சமூகத்திற்கு மேலும் மேலும் தொண்டுகள் புரியவேண்டுமென்ற ஆதங்கத்தினால் ஒரு காலத்தில் எமது தேசத்தின் நீதி நிர்வாகம் சீரற்ற நிலையிலிருந்தபோது உதவி அரச அதிபரின் அனுசரணையுடன் மக்கள் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கென ஏற்படுத்தப்பட்ட மக்கள் குழுவின் கௌரவ செயலாளராகத் தெரிவாகி ஏறத்தாழ இரண்டு வருட காலத்தினுள் 200இற்கும் மேற்பட்ட பிணக்குகளை, பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த செயற்பாட்டில் எதுவித மனச்சோர்வுமில்லாமல் துணிச்சலுடனும் சேவை மனப்பான்மையுடனும் செயலாற்றிய சமூக சேவையாளன். இத்தகைய மகத்தான சேவைகளினால் அவர் ஊரிலும் சமூகத்திலும் உற்றார், உறவினர் மத்தியிலும் பெருமைக்குரியவரானார்.

அத்துடன், சர்மா அவர்கள் தான் கற்பிக்கும் காலத்திலேயே 'உதயன்' பத்திரிகை நிருபராக கடமைபுரியத் தொடங்கிவிட்டார். சுமார் இருபது வருடங்களாக அதன் பணியில் மகத்தான தொண்டாற்றினார். செய்திகள், செய்திக் கட்டுரைகள், விவசாயக் கட்டுரைகள், நூல் விமர்சனம், பேட்டிகள் ஆகியன சார்ந்த விஷயங்களை வெளிவரச் செய்தார்.

உடுவில் கலைமதி சனசமூக நிலையம், உடுவில் இந்து இளைஞர் மன்றம் என்பவற்றுடனிருந்து அதன் கௌரவ ஆலோசகராக பல சமூகப் பணிகளையும் செய்தார். அவர் தொடர்ந்து செய்து வந்த சேவைகளினால் அரசு அவரை 2003இல் சமாதான நீதிவானாக நியமித்தது. இன்னும் எவ்வளவோ பணியாற்றுவாரென நினைத்திருந்த அவரினது குடும்பத்தாருக்கும் நாட்டுக்கும் எமது சமூகத்துக்கும் அவர் பிரிவு மிகவும் ஏமாற்றமளித்துள்ளது.

கலாபூஷணம், ஆசிரியர்
வை.க.சிற்றம்பலவனார்.

## அமைதியாகச் சமூகப் பணியாற்றியவர்



அமைதியாக ஆனால், தான் கொண்ட கொள்கையினை விட்டுக் கொடுக்காமல் தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்துகாட்டிய பெருமகன் தான் அமரர் தர்மலிங்கம் விநாயகமூர்த்தி அவர்கள். வேலணையைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்டு யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தகராக விளங்கிய தர்மலிங்கம் தம்பதிகளின் மூத்த மகனான திரு.விநாயகமூர்த்தி இவ்வுல வாழ்வில் தான் சார்ந்த சமூகத்திற்கு இளவயதுதொட்டே அளப்பரிய சேவையினை அமைதியாகச் செய்துவந்தார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த சமய பக்தரான திரு.விநாயகமூர்த்தி 26.11.2005ஆம் திகதி கனடாவில் காலமானார்.

1947ஆம் ஆண்டு பிறந்த இவர், இளமைக் கல்வியினை வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் பயின்று 1967ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனை வளாகத்தில் இணைந்து பொருளியலில் சிறப்புப்பட்டத்தினைப் பெற்றவர். சிலகாலம் அந்தப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக இருந்து பின்னர் 1972ஆம் ஆண்டு இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் சந்தைப்படுத்தல் முகாமையாளராக இணைந்து கொண்டார். நாட்டில் தமிழர்கள் உயர் பதவிகளிலிருந்து ஓரம்கட்டப்பட்டு வரும் காலத்தில் இவருக்கு இப்பதவி கிடைக்கப்பெற்றமை இவரது ஆற்றல், திறமையின் அடிப்படையில் என்றால் மிகையாகாது. இக்காலத்தில் வடக்கு - கிழக்குப் பகுதிக்கான புகையிரத சேவையின் விஸ்தரிப்புப் பணியில் பெரிதும் பாடுபட்டவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உபதலைவராகவிருந்து அரும்பெரும் தொண்டாற்றினார். அக்காலத்தில் தமிழ் மாணவர்களிடையே நிலவிய பிரச்சினைகளை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு போக்கினார். நாட்டில் இருக்கும்போதோ அல்லது கனடா நாட்டிற்குச் சென்ற பின்னரோ தாம் சார்ந்த சமூகத்தின் விடிவுக்காகத் தன்னாலான பங்களிப்பை நல்கினார். குறிப்பாக எமது பிரதேசத்தில் அல்லலுறும் மக்களுக்காகத் தானும் தனது நண்பர்களும் இணைந்து உதவிப் பொருள்களை அரிமாக்கழகங்களூடாக வழங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

புகையிரதத் திணைக்களத்தில் கடமையாற்றிய காலத்தில் இனக்குரோதம் கொழுந்துவிட்டெரிந்தமையால் தனது உயர் பதவியைத் துறந்து கனடா செல்லவேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. ஓரிரு ஆண்டுகளில் யாழ். வந்து அமைதியாக வாழப்போகிறேன் என்று கூறிய அந்த அமைதியான உள்ளத்தை இனி எப்போது நாம் காண்போம்.

பேரசிரியர் கா.குகபாலன்

## புதிய அதிபர் பதவியேற்பு

கரணவாய் வேதாரணீஸ்வரா பாடசாலையின் புதிய அதிபராக த.இரவீந்திரன் பதவியேற்றுள்ளார்.

இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய எம்.ஜெயவரதராசா இடம்மாற்றம் பெற்றுச்சென்றதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர், கரணவாய் மகா வித்தியாலயத்தில் 10 வருடங்களுக்கு மேலாக பிரதி அதிபராகக் கடமையாற்றியிருந்தார். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

卐

# புதுக்கடை திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் தை மாதம் 29 ஆம் நாள் (11.02.2006) சனிக்கிழமை பகல் 11.10 மணி முதல் 1.10 மணிவரையுள்ள மேடலக்கினமும் பூச நட்சத்திரமும் கூடிய சுப வேளையில்

## அருள் மோட்டோர்ஸ் அண்ட் வேக்ஸ்

இறைவன் திருவருள் துணைகொண்டு எமது நிலையத்தை ஆரம்பித்து வைக்க உள்ளோம். இந்நிகழ்வில் தாங்களும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வழக்கம்பரை, தொல்புரம், சுழிபுரம்.

உரிமையாளர்: திரு.த.அருள்தாசன்


## கவிதை நூல் வெளியீடு

நல்லூர்,பெப்.11

செல்வி சுபாஷினி ஜெகநாதனின் 'பகிர்வு' கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு (புதிய நேரம்) நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும்.

கவிஞர் திருமதி வாசுகி சுதாகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் மதிப்பீட்டுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசும் நிகழ்த்துவர். (3-111)


இன்று புதிய ஆரம்பம்

திருமறைக் கலாமன்றம்

## கலைத்தூது அழகியல் கல்லூரி

KALAITHUTHU COLLEGE OF AESTHETICS



1988 ஆம் ஆண்டிலிருந்து அழகியல் கலைகளில் ஆயிரக் கணக்கான மாணவர்கள் கல்வி பயின்றிட கலங்கரை விளக்காய் அமைந்த திருமறைக் கலாமன்றத்தின்

## 'கவின் கலைகள் பயிலகம்'

கலைத்தூது அழகியல் கல்லூரி

என்ற பெயருடன் விரிவாக்கம் பெற்று தனக்கான புதிய நிரந்தரக் கட்டடத்தில் இன்று முதல் செயற்படவுள்ளது என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். ஆரம்ப வைபவம் இன்று 11.02.2006 மு.ப. 10 மணிக்கு இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றக் கலைக்கோட்டத்தில் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். - திருமறைக் கலாமன்றம்.

வாழ்த்துவோர்:

சிவானஸ் ரெக்ஸ் அன் ரெஸிஸிங் - கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பிறைற் ஒக்சன் சென்ரர் - பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

நாகதர்சினி சிற்றுண்டிச்சாலை - மேற்கு சந்தை, யாழ்ப்பாணம்.

(ச-47806) (32-19-45)


## ஆறாத்துயருடன் அகவை ஒன்றில்...



அமரர்

### செல்லையா ரஜனிகாந்

(சங்கமன்/ சுரேன்)

திதி: 11.02.2006

மண் மகிழ 22.11.1974

கண் நெகிழ 24.01.2005

அன்பினால் எம்மையெல்லாம் அரவணைத்து
எம் ஆருயிர் நண்பன் சங்கமனே.....
இறுதி மூச்சுவரை எம்முடன் ஒன்றாய்
பணியாற்றியவனே... இன்றுடன்
நீ எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டானதுவோ...
நம்பமுடியவில்லை உன் மீள் வரவிற்காய்
காத்திருக்கிறது உன் நண்பர் குழாம்...
எமக்காக மீண்டும் ஒரு தடவை வருவாயா..?
என்றும் உன் பசுமையான நினைவுடன்
எம் பணி தொடர்கின்றோம்......

-நண்பர்கள்.

(ச-47801) (39-32-19-45)

## திருமண ஆலோசனையக தசாப்த நிறைவில் ஆய்வரங்கம்

கொழும்பு,பெப்.11

வேல் அமுதன் திருமண ஆலோசனையக தசாப்த நிறைவை ஒட்டிய ஆய்வரங்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க நவரட்ண சிங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 'பல்வேறு துறை நோக்கில் வேல் அமுதன் திருமண ஆலோசனையகம்' என்னும் பொருளில் ஆய்வரங்கம் இடம்பெறும்.

தமிழ், வரலாறு, வணிகம், தொழில், அழகியல், கலை, ஒப்பீடு, பண்பாடு, சமூகம் என்னும் பல்வேறு தலைப்புகளில் பலர் ஆய்வுரைகளை நிகழ்த்துவர். (எ-204)

## சுழிபுரம் முன்பள்ளியின் பரிசளிப்பு விழா

சுழிபுரம்,பெப்.11

சுழிபுரம் மேற்கு பாரதி முன்பள்ளியின் பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுழிபுரம் கதிர்வேலாயுத சுவாமி ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளன.

முன்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவி திருமதி ஜெ.சுதாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் இ.இராசதுரை கலந்து கொள்வார். (எ-28-161-203)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.11

வதிவோர் வரியிறுப்பாளர் சங்கத்தின் செயற்பாடுகளை மக்களுக்குத் தெளிவாக விளங்கப்படுத்தும் கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கண்டி வீதியில் உள்ள பஸ்தியான் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பத்திரிகையாளர்களுடான சந்திப்பும் இடம்பெறும். (3-203)

## நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 05 - 06 - 1918

உதிர்வு 22 - 02 - 2005



### திருமதி கனகம்மா விநாசித்தம்பி

திதி: சதுர்த்தசி

அன்பால் எம்மை அணைத்து அறிவால் எமை உயர்த்தி
பண்பால் பலர் போற்ற பாரினில் வித்திட்ட எம் தெய்வமே!
ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறாதம்மா உங்கள் பிரிவு
என்றும் உங்கள் முகம் நெஞ்சினிலே நின்று நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

விடத்தற்பளை, மிருசுவில்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(46646)(32-19-45)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 18 - 08 - 1932

மறைவு 13 - 01 - 2006



அமரர்

### வீரசிங்கம் சோமசுந்தரம் (B.A.)

(ஓய்வுபெற்ற உபஅதிபர், முகாமையாளர்-கோப்பாய் தனிப்பனை வீரபத்திர சுவாமி கோயில்)

13.01.2006 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து பற்பல உதவிகள், ஒத்தாசைகள் புரிந்தோருக்கும், மரணக்கிரியைகளில் கலந்து கண்ணீர் மல்கிட அஞ்சலித்தோருக்கும், மலர்வளையம், மலர்மாலை சார்த்தியோருக்கும் ஆறுதல் தேறுதல் கூறியோருக்கும், பலவகையான கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டு துயர் பகிர்ந்தோருக்கும், இறுதி நிகழ்வில் அஞ்சலியுரைகள் மூலம் அமரர் பெருமைகளை எடுத்தியம்பித் துதித்தோருக்கும், வெளியிடங்களில் இருந்து தொலைத்தொடர்புகள், தந்திச் சேவைகள் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்சடங்கு நிகழ்வுகளில் காலநேரத்திற்கேற்ப பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியும், நாம் நன்றி கூறத் தவறிய அனைத்து நல்லிதயங்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியை மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

இராஜவீதிச் சந்தி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தொ.பே. 0777 283791 (46590)


## புதுக்கடைத் திறப்பு விழா





# அருள்நிலா நகைமாடம்

மேற்படி எமது ஸ்தாபனத்தை நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் தை மாதம் 29ஆம் நாள் (11.02.2006) இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பிக்க உள்ளோம் என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(C/47807)

இல. 83/1, கஸ்தூரியார் வீதி, செம்மாதெரு, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மட்டக் கிரிக்கெட் போட்டி

# மகாஜனாவை இனிங்ஸால் வீழ்த்தி வெற்றிவாகை சூடியது சென்.ஜோன்ஸ்

## சதமடித்தார் சஜிந்தன்

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணிகள் இடையே நடைபெற்றுவரும் சிநேகபூர்வ கிரிக்கெட் தொடரில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் மகாஜனா கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி ஒரு இனிங்ஸில் 130 ஓட்டங்கள் வித்தியாசத்தினால் வெற்றிபெற்றது.

சென்.ஜோன்ஸ் துடுப்பாளர் சஜிந்தன் அற்புதமாக ஆடி 133 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க இலகுவில் வெற்றியைச் சுவீகரித்தது அணி.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 92 ஓட்டங்களை மட்டும் பெற்றது. தர்சன் 57 ஓட்டங்களையும், மயூரன் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் நிருபன் 24 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், கஜரூபன் 11 ஓட்டங்களைக் கொடுத்து, இரண்டு விக்கெட்டுக்களையும், ஜனுசன் ஒன்பது ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கிருசாந்த் ஆறு ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் நவகீதன் 11 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மூன்று விக்கெட்டினை இழந்து 278 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தினை இடைநிறுத்திக்கொண்டது.

சஜிந்தன் ஆட்டம் இழக்காமல் 133 ஓட்டங்களை விளாசினார். சஞ்சீவன் ஆட்டம் இழக்காமல் 25 ஓட்டங்களையும் நேசவர்மன் 43 ஓட்டங்களையும் கிருசாந்த், தினேஷ் 13 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் மகாஜனாக் கல்லூரி அணி வீரர்களான புவனேசன் 46 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் திலீபன் 32 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 55 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் பிரகலாதன் ஆட்டம் இழக்காமல் 27 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்கள் நிருபன் 14 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுகளையும் நவகீதன் 15 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுகளையும் கிறிசான் எட்டு ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். (6-190)

## சண்டிலிப்பாய் பிரதேச விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.11

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான 2006 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பப் படிவத்தினை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.மோகன்தாஸிடம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(3-190)

## சென்.ஜோன்ஸில் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.11

பரியோவான் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.தனபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இங்கிலாந்து பெடபோர்ட் சுகாதார சபையின் காது,மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ரோய்ஸ் அரசரட்ணம் கலந்துகொள்வார்.

(3-190)

# குத்துச்சண்டை, மல்யுத்தம் விளையாட்டுகள் அறிமுகம்

### ஆர்வமுடையவர்கள் விண்ணப்பிக்க வசதி

குத்துச் சண்டை, பாரம் தூக்குதல், மல்யுத்தம் ஆகிய விளையாட்டுக்களில் ஆர்வமுடைய விளையாட்டு வீரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி போட்டி தொடர்பாக மேலதிக விவரங்களை யாழ்.மாவட்ட செயலகத்தில் உள்ள விளையாட்டு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் -

தமக்கு கிடைக்கப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் தெரிவுப் போட்டி இடம்பெறும் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

(3-190)

# சதுரங்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ்.மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டுக் கழகம், டாக்டர் நைல்ஸ் ஞாபகார்த்தமாக நடத்திய சதுரங்கப் போட்டியில் வெற்றிபெற்றோரின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

வெற்றியீட்டியோர் விவரங்கள் வருமாறு:-

**12 வயதுப் பிரிவு**

**ஆண்கள்** - எ.அன்ரு (யாழ்.இந்துக் கல்லூரி), என்.லவலோசன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.லோகநாத் (யாழ்.இந்துக் கல்லூரி).

**பெண்கள்** - பி.மாதங்கி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), என்.அமிழ்தினி (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.சௌமியா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.துளசிகா (வேம்படி மகளிர் கல்லூரி).

**15 வயதுப் பிரிவு**

**ஆண்கள்** - ஜே.நிரேஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), என்.வர்ணன் (யாழ்.இந்துக் கல்லூரி), வி.விதுஷன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**பெண்கள்**- என்.கௌசிகா (வேம்படி மகளிர் கல்லூரி), பி.சுமித்தா (வேம்படி மகளிர் கல்லூரி), மேரி.ஜோசப் சாந்திமேரி (வேம்படி மகளிர் கல்லூரி).

**19 வயதுப் பிரிவு**

**பெண்கள்** - ஆர். தர்ஷனா (வேம்படி மகளிர் கல்லூரி), பி.சுதர்சனா (வேம்படி மகளிர் கல்லூரி), எம்.நிரஞ்சனி (வேம்படி மகளிர் கல்லூரி).

**திறந்தபோட்டி**

**ஆண்கள்** - எஸ்.வித்தியதரன், எஸ்.லோகலநாதன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஆர்.செந்தில் மாறன் (பல்கலைக்கழகம்).

**பெண்கள்** - எஸ்.சிவப்பிரியா (யாழ்.பல்கலைக்கழகம்), ஜெ.ஜெனித்தா (யாழ்.பல்கலைக்கழகம், ஜெ.யாழினி (யாழ்.பல்கலைக்கழகம்). (3-190)




# பருத்தித்துறை பிரதேச செயல்கத்தில் விளையாட்டுப் போட்டிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.11

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான 2006 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டிகளுக்கான ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன.

குழுநிலைப் போட்டிக்கான அட்டவணை தயாரிக்கும் கூட்டம் எதிர்வரும் புதன் கிழமை காலை 9 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் கழகங்களின் பிரதிநிதிகளினை சமுகம் அளிக்குமாறும் -

இதுவரை விண்ணப்பத்தினை பெற்றுக் கொள்ளாத கழகங்கள் அன்று விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

(3-190)

# மாவட்ட குழு நிலைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.11

2006ஆம் ஆண்டு மாவட்ட மட்ட கழகங்களுக்கு இடையே நடைபெறவுள்ள ஹொக்கி (ஆண், பெண்), கூடைப்பந்தாட்டம் (ஆண், பெண்), மேசைப் பந்தாட்டம் (ஆண், பெண்), கரப்பந்தாட்டம் (ஆண், பெண்) ஆகிய குழுநிலைப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் விண்ணப்பப்படிவத்தினை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாக சமர்ப்பிக்குமாறு யாழ்.செயலக விளையாட்டு அலுவலகம் கேட்டுள்ளது. (3-190)


# 'மெக் கோஸ்ட் கட்டர்' சுப்பர் மாக்கெட் அரச அதிபரினால் நேற்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் 'மெக் கோஸ்ட் கட்டர்' என்ற சுப்பர் மாக்கெட் நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 8 மணியளவில் நடைபெற்ற இந்தத் திறப்புவிழாவில் சுப்பர் மாக்கெட் இயக்குநர் சபையின் உறுப்பினர் திருமதி நடராசா மனோறஞ்சிதம் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் இந்தத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சுப்பர் மாக்கெட்டை நாடாவை வெட்டி சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.




விழாவில் வாடிக்கையாளர்கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். விற்பனைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பொருள்களை அரச அதிபர் கே.கணேஷ் உட்பட பலரும் பார்வையிட்டனர்.

(எ-13)

# சமூக சேவைப்பணிகளை முன்னெடுக்க த பினான்ஸ் நிறுவனம் முன்வந்துள்ளது

குருநகர், பெப்.11

த பினான்ஸ் கம்பனி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் தனது சேவையை ஆரம்பித்து 30ஆவது வருட நிறைவைப் பூர்த்தி செய்துள்ள நிலையில் வாடிக்கையாளர்களின் எதிர்கால நலன்களை முன்னிட்டு பல சமூக சேவைப்பணிகளை முன்னெடுக்கவிருக்கிறது என அந் நிறுவனத்தின் யாழ்.கிளையின் பிராந்திய முகாமையாளர் முத்தையா இரகுநாதன் தெரிவித்தார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வறுமைக் கோட்டுக்குட்பட்ட மற்றும் உதவியற்ற நிலையில் உள்ள மக்கள் ஐவருக்கு தொழில் உபகரணம், இருப்பிடத்தை புனரமைப்பதற்கான உதவி மற்றும் எதிர்கால வாழ்வை வளப் படுத்துவதற்கான உதவி என்பன வழங்கப்படவிருக்கின்றன.

இந் நிறுவனத்தின் வடகிழக்குப் பிராந்திய இயக்குநர் செல்வி மாலா சபாரட்ணத்தால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்திலும் குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்திலும் வைத்து இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கை முழுவதிலும் வாழ்ந்துவரும் சகல இன மக்களினதும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்குடன் எமது நிறுவனத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்திவரும் எமது தலைவர் தேசமான்ய டாக்டர் லலித் கொத்தலாவல சரண நிதியம் ஊடாக இது போன்ற பல உதவிகளை தொடர்ந்தும் நாம் வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

எமது கிளை ஆரம்பித்து முப்பதாவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு எமது வாடிக்கையாளர்களுக்கு பல சலுகைகளையும் வழங்க உள்ளோம் - இப்படி இரகுநாதன் மேலும் தெரிவித்தார்.

(3-51)



'மெக் கோஸ்ட் கட்டர்' சுப்பர் மாக்கெட் திறப்பு விழாவில் இயக்குநர் சபை உறுப்பினர் மங்கள விளக்கேற்றுவதையும் யாழ். அரச அதிபர் நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் அங்கு பொருள்கள் காட்சிப் படுத்தப்பட்டிருப்பதையும் சுப்பர் மாக்கெட்டின் முன்பக்கத் தோற்றத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்:கவிதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

சிறிது காலம் பாவித்த நவீன பல வசதி களைக் கொண்ட (With motor), சிங்கர் தையல் இயந்திரம், பாவித்த 15" view sonic Computer monitor, பாவித்த T.V. Booster (KOBE), Japan Eurotel Caller, ID Phone, சிறிய Amplifire with Two Boxes என்பன விற்ப னைக்குண்டு. தொடர்பு: 071-3056757. (46636)

பலசரக்குக் கடைக்குத் தேவையான மேசை, தராசு, கண்ணாடி சோக்கேஸ், விறாக்கைகள் போன்ற தளபாடங்களுடன் பலசரக்குப் பொருள்களும் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: 077-6147361. (46605)

TOPFIED (1 காட்) றிசீவர், 10 அடி டிஸ்க், ERO STAR (2 காட்) றிசீவர், 8 அடி டிஸ்க் CBN SAT பைகேச், DVD 3500w SONY 5.1. Sound Set. விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077-6183302. (46633)

## காணி விற்பனைக்கு

கூச்சேரி கிழக்கு ஒழுங்கைக்கு அண்மை யான சென்.ஆன்ஸ் ஒழுங்கையில் 1½ பரப் புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:A.T. ஜெயசிங்கம், 8,A சுவாமியார் வீதி, கொழும் புத்துறை. (46640)

## வீடு விற்பனைக்கு

4 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற் பனைக்குண்டு. தொடர்பு: S.சிறி, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (கல்வாரிச் சேர்ச்சுக்கு அருகில்). T.P.: 0777 111400. (46251)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

1½ வயது ஆண் ஜேர்மன் Shepard. 1½ வயது பெண் அயில்ஸ் 8 அடி இரும்புக் கூட் டுடன் சேர்ந்து மலிவு விலையில் விற்ப னைக்குண்டு. தொடர்பு: S. சிறிரங்கன். T.P.: 0777-222180. (சி/47869)

நல்ல இன பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜன், 70/2, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம். (46606)

## கோழிக்குஞ்சு விற்பனை

தரமான Original Prima பேட்டுக்குஞ்சு கள் (1 மாதம் நிரம்பியது) உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (46498)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழி கள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை. நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை யடி, நல்லூர். (46499)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப் பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட் டுக் குஞ்சுகள் 20.02.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத் தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும் ஐங் கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/47782)

## வாகனங்கள் வாடகைக்கு

கார், வான், மோட்டார்சைக்கிள் என்பன SELF-DRIVE வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன், சாரதி அனுமதிப் பரீட்சைக்கான மோட்டார் சைக்கிள், திருமணக்கார் சேவை களையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அரு கில்). T.P.: 021 222 9154, 0777 593722. (46335)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 30 வயதுடைய, R.M.P. (INDIGENOUS MEDICINE) மணமகனிற்கு அழகிய படித்த கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பிற்கு: விளம்பர இல. 2802, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (46641)

இந்து கௌரவ குடும்பம், 1972 இல் பிறந்த, உத்தரம் 2ஆம் பாதம், லண்டனில் ஏழு வருடமாக வதியும் மணமகனிற்கு மண மகள் தேவை. மணமகன் P.R. இல்லாதவர். கனடா, இலண்டன், ஜேர்மனியில் P.R. செய் யக் கூடிய மணமகளை எதிர்பார்க்கின் றோம். தொடர்பிற்கு: 077-3086894. (சி/47803)

## தவறிவிட்டது

வீமன்காமம், தெல்லிப்பழையைச் சேர்ந்த இராசதுரை வளர்மதி என்பவரது விசேட அடையாள அட்டை (0907013034) 21.01.2006 இல் யாழ்.நகர்ப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள். "யோக புரம் நலன்புரி நிலையம்", உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (46635)

## மணமகள் தேவை

1969 இல் பிறந்த, லக்கினத்தில் செவ் வாய் உள்ள, கணக்காளராக ஆஸ்தி ரேலி யாவில் பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த அழகிய மணமகளை அவரது மாமனார் தேடுகிறார். தகுதியானவர்கள் சாதகம், படம் என்பவற்றுடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

**கலாநிதி க.குணராசா**
75/10A. பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.
T.P.:2222337.
(46644) (42.17.15)

## தைப்பூச தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.11

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆல யத்தில் இன்று சனிக்கிழமை தைப்பூச விழா நடைபெறவுள்ளது.

அம்பாளுக்கு விசேட பூசை அபிஷேகங் கள் நடைபெற்று அழகிய திருமஞ்சத்தில் அம் பாள் வீதியுலா வரு வார். பக்தர்களின் நன்மை கருதி அமுத சுரபி அன்னதான மண்டபத்தில் விசேட மாக அன்னதான ஒழுங்குகள் செய் யப்பட்டுள்ளன. (3-203)

* * *

நவாலி,பெப்.11

ஆனைக்கோட்டை கரைப்பிரான் விநாய கர் ஆலயத்தில்இன்று தைப்பூசத் திருவிழா நடைபெறவுள்ளது.

* * *

யாழ்ப்பாணம்,பெப்.11

நயினாதீவு மேற்கு முனைப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய தைப்பூசத் திருவிழா இன்று சனிக்கிழமை பிற் பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. (3-203)

### மஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.11

இணுவில் கந்த சுவாமி ஆலய தைப் பூச மஞ்சத் திரு விழா இன்று சனிக் கிழமை நடைபெற வுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு 108 சங்காபி ஷேகம், நண்பகல் 12 மணிக்கு விசேட பூசைகள், மாலை 4.30 மணிக்கு சண் முகா அர்ச்சனை என்பன நடைபெற்று, 5.30 மணிக்கு சண் முகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக திருமஞ் சத்தில் வீதியுலா வருவார். (3-203)

## Organ/Violin Notes

ஓர்கன், வயலின், கிற்றார், வீணை, புல்லாங் குழல் போன்ற இசைக் கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள் (பாகம் 1-42) மற்றும், மேற்கத்தேய இசைபற்றி தெரிந்து கொள்வோம். Keyboard exercise ஆகிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு. ஓர்கன் வகுப்புகள் மாலை 4 மணியிலிருந்து நடைபெறுகின்றன.

S.S Rajeendran
Karaweena Isai Manram
75, Temple Road, Nallur, Jaffna. T.P: 0713055991
நல்லூர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தெற்கே

## IMMEDIATE VACANCY
### COMTEC - CHULIPURAM

Applications are invited for the post of Instructor - Motor Mechanism & Repair.

Qualification: NCT (Mechanical Engineering)
NAB (Auto mobile)
Experience: At least 3 years experience in the relevant field
Salary : **Negotiable**

Applicants should send their Bio-Data before 14-02-2006 to reach
The Director
**COMTEC - CHULIPURAM.** (C/47805) (24)

## வாழ்த்துகின்றோம்

புதுமெருகுடன் இன்று திறந்து வைக்கப்படும் வீடியோ கலாமினி நிறுவனத்தினரின் "இராஜமாணிக்கம்" கல்யாண மண்டபம் சிறப்பாக வளம்பெற்று நிறைவான சேவையாற்றி அச்சு வேலிக்கு பெருமை சேர்க்க மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

### A.M.C. திருமணக் கார் சேவை



புத்தம்புதிய குளிரூட்டப்பட்ட ஆடம்பரத் திருமணக்கார் நியாயமான கட்டணத்துடன் எந்த நேரமும் சேவையில்

T.P.: 077 3565300
077 3545386
E-mail:-Kathir 92@Yahoo.com.

அஞ்சலா மெடிக்கல் சென்ரர்
அச்சுவேலி.
(C.47809)(42.15.17)

SDC SWISS AGENCY FOR DEVELOPMENT AND COOPERATION

## TENDER NOTICE

**Swiss Agency for Development and Cooperation, Field Officer Jaffna** invites tender for the construction of a two storied building (60'x25') at J/KALADDY R.C.T.M.S, Point Pedro.

Bidders must have ICTAD grade M7

Bid document shall be collected at SDC field office, Jaffna 521/11, Point Pedro Road, Jaffna.

Tel: 021-2223928 up to12.00 a.m on 24th of February 2006 (46632)

## 87ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா - 2006
## NATIONAL DAY CELEBRATION - 2006

அரியாலை, யாழ்ப்பாணம் ARIYALAI, JAFFNA.

கடந்த 08-02-2006 இல் உதயனில் பக்கம்10 இல் பிரசுரமான விளம்பரத்தில் மாவட்ட ரீதியிலான அணிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் என்ற விளம்பரத்துக்கான தலைப்பு தவறுதலாக பிரசுரமாகியுள்ளது. எனவே, தயவு செய்து யாழ். மாவட்ட ரீதியிலான அணிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் என அதனைத் திருத்தி வாசிக்கவும்.

(46639)(26-42.17.15)

87ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா நிர்வாகத்தினர்.

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் நடராசா (செல்லையா)



அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் நடராசா அவர்கள் 06.02.2006 இல் காலமானார்

அன்னார் வைத்திலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மகனும் அரியகுட்டி - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் அமரர் ஞானசேகரம், அமரர் வள்ளியம்மை, அமரர் செல்லப் பெருமாள், அமரர் அபிராமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் சிறி இராசகுலதேவன் (சுவிஸ்), அமரர் பத்மராஜதேவி , கருணாநிதி (சுவிஸ்), மகேந்திரன் (ஜேர்மனி), மல்லிகா (ஜேர்மனி), சூரிய கலா(லண்டன்), சவுந்தரராஜா(பெல்ஜியம்) ஆகியோரின் தந்தை யும் அமரர் தவமலர் , குமுதினி (சுவிஸ்), தவஞ்ஞான ரட்னேஸ் வரி (ஜேர்மனி), ஜெயமூர்த்தி (ஜேர்மனி), ஜேபாலசிங்கம் (லண்டன்), சுபாஜினி (பெல்ஜியம்) ஆகியோரின் மாமனும் சதீஸ் (ஜேர்மனி), சுகன்ஜா, சாருஜா, சரண்ஜா (சுவிஸ்), சாருஜன் (சுவிஸ்), நாமிகா(ஜேர்மனி),மதுசா(ஜேர்மனி), கோடிகன் (ஜேர்மனி), நிவேதன் (ஜேர்மனி), விதுசா (ஜேர்மனி), ஜெயந்தன் (ஜேர்மனி),பார்த்தீபன் (லண்டன்), பிருந்தா (லண்டன்), சுஜீதன் (பெல்ஜியம்),சுஜீதா(பெல்ஜியம்) ஆகியோரின் பேரனும் அமரர் பாலசிங்கம்,அமரர் தியாகராஜா, நடராசா , அமரர் புவனேஸ்வரி, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, அமரர் தவமலர், யோகேஸ்வரி, அமரர் விவேகானந்தம்,உதயகுமாரி, தில்லையம்பலம், இலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2006) சனிக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் அல்லைப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பேரமக்கள்.

முதலாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.
(46645) (21.15.17.42)

அச்சுவேலியில் குதூகல ஆரம்பம் இன்று தைப்பூசத் திருநாளில்

**இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம் (குளிரூட்டப்பட்டது)**

## திறப்புவிழா அழைப்பு

**காலம்:** இன்று (11-02-2003) சனிக்கிழமை
**நேரம்:** முற்பகல் 10.30 மணி
**திறந்து வைத்தல்:** உயர் திரு ச.கைலாசபிள்ளை (நவம்) (நியூ கமல் செரமிக்ஸ், யாழ்ப்பாணம்)
**மங்கள விளக்கேற்றல்:**

1. திரு.சு.சிவகுமாரன் - சுந்தர்சன், மானிப்பாய்
2. திரு.மு.இரகுநாதன் -முகாமையாளர், த பினான்ஸ் கம்பனி லிமிட்டட், யாழ்ப்பாணம்.
3. திரு.தி.மாணிக்கவாசகர் - பொறுப்பதிகாரி, பிரதேசசபை, அச்சுவேலி.
4. திரு.சி.சோமகுலசேகரம் - தங்கராசா பிறேமில் சென்ரர், பருத்தித்துறை.
5. திரு.மா.சிவஞானசுந்தரம் J.P. - நில அளவையாளர், இடைக்காடு.
6. திரு.க.சிவஞானசுந்தரம் - அச்சுவேலி வடக்கு.
7. திரு.ம.ஸ்ரீதரன் - இயக்குநர், அறிவகம் கல்வி நிலையம், அச்சுவேலி.
8. திரு.பி.அருட்பிரகாசம் -விவசாய சம்மேளனத் தலைவர்- அச்சுவேலி மேற்கு.
9. திரு.பே.ஞானப்பிரகாசம்- நர்மதா லொறி உரிமையாளர்.
10. திரு.இ.யோகராசா J.P. - கிராம சேவையாளர்.

**ஆசியுரை:** "செஞ்சொற்செல்வர்" திரு.ஆறு திருமுருகன் (உபஅதிபர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி).
**வாழ்த்துரை:** "வில்லிசைப் புலவர்" திரு.நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி J.P.)

*தவிர்க்கமுடியாத காரணங்களினால் தனிப்பட்ட அழைப்பு கிடைக்காதவர்களும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று குடும்பசமேதராய் விழாவில் கலந்துகொண்டு மண்டபத்தை வாழ்த்தி ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**வீடியோ கலாமினி, அச்சுவேலி.**
T.P.: **077-3053080** (சி/47808)(26-15-17-42)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் வருடாந்த மகோற்சவம்

கொடியேற்றம் 12.02.2006 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெறும்

10 ஆம் திருவிழா 21.02.2006 செவ்வாய்க்கிழமை மஞ்சம்
14 ஆம் திருவிழா 25.02.2006 சனிக்கிழமை சப்பரம்
15 ஆம் திருவிழா 26.02.2006 ஞாயிற்றுக்கிழமை தேர்
16 ஆம் திருவிழா 27.02.2006 திங்கட்கிழமை தீர்த்தம்
28.02.2006 பகல் மகேஸ்வர பூசை. இரவு தண்டிகை உற்சவம்
01.03.2006 மாலை வயிரவர் உற்சவம் நடைபெறும் (46808)(33&11&49)

விளம்பர அன்பளிப்பு:
ஹரன் புடைவையகம், பலாலி வீதி, திருநெல்வேலி.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக கேட்போர் மண்டபம் ஒன்றைக் கட்டி இன்று 11.02.2006 தைப்பூசத் திருநாளில் திறந்துவைத்து, பாடசாலைக்கு அர்ப்பணிக்கும்

**திரு.திருமதி மாணிக்கம் சுப்பிரமணியம்**

தம்பதியினரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பிறவுண் வீதி,
கொக்குவில். (46803)(33&11&49) த.அழகரத்தினம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 12 - 04 - 1936



உதிர்வு 12 - 01 - 2006

அமரர் **செல்லத்துரை பிறிஜெட் (பூமணி)**

கரம் பற்றி துணைநின்ற அன்பான பூமணியே!
பத்துத் திங்கள் எமைச் சுமந்த தாயே - நீ சென்று
இன்றோடு மாதமொன்று கரைந்ததுவோ?
செழிப்போடும் சிறப்போடும் இல்காத்த தாயே!
சிறப்புகள் சேரும் வேளை இறப்பிற்குள் நுழைந்தாயே!
நெஞ்சத்தை வாட்டுதம்மா உம்பிரிவு - எம்
ஈரவிழி உம்வரவை எதிர்பார்த்து ஏங்குதம்மா!

36,ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை. (46806)(33-11-49)
நினைவகலாத் துயருடன்:
கணவர், பிள்ளைகள்.

## உயர்தர மாணவர் ஒன்றியத்தின் ஒன்று கூடலும் மதியபோசன விருந்தும் - 2006

நாளை (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

அதிபர்.
யா/இணுவில் மத்திய கல்லூரி. (46802)(33&11&49)

## மரண அறிவித்தல்

### இராசையா பார்வதி

யாழ்ப்பாணம் - இளவாலையைப் பிறப்பிடமாகவும் உடையார்கட்டு வடக்கை தற்போதைய முகவரியாகவும் கொண்ட இராசையா பார்வதி நேற்று (10-02-2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், பவானி(பிரான்ஸ்), சியாமினி (ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, முல்லைத்தீவு), வோஜினி, துஷ்யந்தன் (பிரான்ஸ்), யாழினி, வினோதினி (யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்) ஆகியோரின் அன்புத் தாயும் செல்வக்குமார் (பிரான்ஸ்), கென்றி பீஸ்மன் (யா/ஊர்.ப.நோ.கூ.ச.) வோஷிங்டன் (அழகுநிலா நகை மாடம், முள்ளியவளை), யூட் ஆகியோரின் அன்பு மாமியும் கஜேந்தினி (பிரான்ஸ்), பவித்திரன் (பிரான்ஸ்), கயா (பிரான்ஸ்), கேனுஷா, கேனுஷன், ஜதுர்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-02-2006) சனிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் உடையார்கட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (சி47823)

ஆசிரியர் விடுதி,
உடையார்கட்டு.
தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி செல்லப்பா

சுன்னாகம், மயிலணியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமாகிய திருமதி சரஸ்வதி செல்லப்பா 08.02.2006 அன்று இரவு சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் செல்லப்பாவின் அன்பு மனைவியும் சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த காலஞ்சென்ற Dr.நாகநாதர் தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகளும், உடுப்பிட்டி கரணவாயைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமலிங்கம் (பணக்காரப்பா) தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமநாதன், Dr.சண்முகநாதன் (London), Dr. இராஜலக்ஷ்மி (Australia), சீதாலட்சுமி (Colombo) ஆகியோரின் அருமைத் தாயும், ச.கமலாதேவி (London), Prof.T. கணேஸ்வரன் (Australia), காலஞ்சென்ற முருகசோதிராசா (DIT) ஆகியோரின் அன்பு மாமியும் Dr.செந்தூரன் , சிவசங்கரி (London),பங்கயற்செல்வி (ஆசிரியை, Australia), Dr.கங்காதரன் (Student, Australia), சிவநாராயணி (IT Lecturer - ESOFT), சிவரஞ்சனி (Student), முரளிதரன் (மாணவன், Hindu College Colombo-4) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் Graeme (Accountant, Australia), Dr.செந்தினி (Australia), Capt. சந்திரநாத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ரூபி, டக்லஸ் ராமநாதன், ஹரிதர்ஷன், ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
No.18, Peiris Road, MountLavinia. 0714952674
பிள்ளைகள், Dr.சண்முகநாதன் குடும்பம், Dr. இராஜலக்ஷ்மி குடும்பம், திருமதி சீதாலட்சுமி குடும்பம். (சி/47821)(33-16-49)

### லோறன்ஸ் அலக்ஸ்சாண்டர் (சம்மாட்டி)

*(பிரபல தொழிலதிபர் - உரிமையாளர் - Hotal Imperial, Bampalapittya, Passion Pafric, Main Street, Colombo, Farm Fax Wellawatta, Mundel Resturent Puttalam, Newton Whine Shop, Jaffna, No.1 Bar, k.k.s. Road, Jaffna, A.J.M. Tex, Jaffna.)*



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் 15/4, Vajira Road, Bampalapittyaவை வசிப்பிடமாகவும் கொண்ட லோறன்ஸ் அலக்ஸ்சாண்டர் நேற்று (10.02.2006) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சலமோன் லோறன்ஸ் - பாக்கியம் தம்பதியரின் அருமைப் புதல்வரும் காலஞ்சென்ற அருளப்பு - உலுவிசம்மா தம்பதியரின் மருமகனும் மேரி மெற்ரல்டாவின் (பிறேமா) அன்புக் கணவரும் அலக்ஸ் நியூட்டன் (லண்டன்), நிக்சன், நிருபன், நிசான், லக்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வமாணிக்கம் (யோசேப் - *A.J.M. Tex* ), மரியதாஸ் (லண்டன்), உத்தமசீலி (பிரான்ஸ்), ஞானதேவி (நீர்கொழும்பு), ஜெயசீலி (இத்தாலி), அமலசீலி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருள்மேரி, லீமா றோஸ், அந்தோணிபர்ணாந்து, காலஞ்சென்ற செபஸ்ரியாம் பிள்ளை மற்றும் ஜோன்ஜோச், ஜெயரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

யாவில் லேன், (சி/47816)(33-16-49)
ஆனைக்கோட்டை.
தகவல்:
யோசேப் *(A.J.M. Tex)*

## ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7420221 முதல் 7430466 வரை. சீட்டிழுப்பு இல. 210 திகதி 09-02-2006

### வெற்றி எண்கள்

**5 6 6 0 3 4** சுப்பர் எண் **20**

ஜக்பொட் பரிசு ரூ. **10,000,000/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 10,000,000/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 07 | 50,000/= | 350,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 88 | 5,000/= | 440,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 895 | 500/= | 447,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8908 | 50/= | 445,400/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 88281 | 10/= | 882,810/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 90 | 1,000/= | 90,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 890 | 100/= | 89,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8827 | 20/= | 176,540/= |
| | | மொத்தம் | ரூ. 3,966,250/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **4,568,850/-**

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரேலியா | 7423354-6-86 |
| அநுராதபுரம் | 7426599-7-88 |
| மட்டக்களப்பு | 7425170-4-31 |
| திருகோணமலை | 7421017-9-06 |
| மாத்தளை | 7423986-1-85 |
| கம்பஹா | 7430247-1-10 |
| பதுளை | 7425347-4-36 |
| அம்பாறை | 7427328-2-47 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

**ரூ. 10,247,700/-**

தொடர் இல. 6508170 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 பெப்ரவரி 13 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

## மனோகரா யாழ்ப்பாணம்

காதலர்தினத்தை முன்னிட்டு
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
இளம் புயல் ரவி, கம்னா நடித்த
**இதயத்திருடன்**
காட்சி நேரம்: 10.30, 1.30, 4.30, 7.30

## ராஜா யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
**சரவணா**
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
நேரம்: பு.நே. 10.30, 2.15 மட்டும்

## நாகம்ஸ் சுன்னாகம்

சத்தியராஜ் (இருவேடம்)
சங்கவி,ஆனந்தராஜ் நடித்த
**அய்யர் I.P.S**
காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00

## நாதன்ஸ் யாழ்ப்பாணம்

சினிமா
அல்டிமேட் ஸ்ரார் அஜித்,
லைலா
மற்றும் பலர் நடித்த
**பரமசிவன்**
புதியநேரம்:
10.30, 2.30



## Dialog GSM



எந்நேரமும் உன்னுடன்.....

### டயலொக் வாடிக்கையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

தற்போது எமது விநியோகம் தாராளமாக மேற்கொள்ளப்படுவதால் தயவு செய்து மேலதிக விலைக்கு விற்பனை செய்யவோ, கொள்வனவு செய்யவோ வேண்டாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

100/=, 400/=, 1000/= KIT (சேவை) தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள அனுமதியளிக்கப்பட்ட DIALOG GSM முகவர்

**Sri Murugan**
**Tele communication & Agency Post Office,**
303,K.K.S.Road, Jaffna.
T.P.: 021 222 5392, Fax:2223214.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர்களின் பணிப்புறக்கணிப்புப் போரால்

# வடமத்திய மாகாணத்தில் நேற்று வைத்தியசாலைகள் செயலிழப்பு

கொழும்பு, பெப்.11

அரச ஊழியரின் சம்பளம் தொடர்பான திஸ்ஸ தேவேந்திர சம்பள ஆணைக் குழுவின் அறிக்கையை அமுல்படுத்தக் கோரி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மாவட்ட ரீதியாக நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் நேற்று நான்காவது நாள் வடமத்திய மாகாண அரச வைத்தியசாலைகள் முற்று முழுதாக ஸ்தம்பிதமடைந்தன.

முன்னதாக கொழும்பு, பதுளை, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்களில் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருந்த அரச மருத்துவர்கள் நேற்று வட மத்திய மாகாணத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதனால், அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களிலுள்ள நோயாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்தனர்.

பின்தங்கிய பிரதேசங்களிலிருந்து வந்திருந்த வெளிநோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை, தமது கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் காலவரையற்ற வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்படுமென்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது. (ஐ-க)

## 'சாம்ஸ்ரெக்' மாணவருக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.11

'சாம்ஸ்ரெக்' (SAAMSTECH) நிறுவனத்தில் கல்விகற்றுக்கொண்டிருக்கும் மற்றும் பதிவுகளை மேற்கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் அங்கு கடமை புரியும் அலுவலர்கள் அனைவருக்குமான முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் கேட்டுள்ளனர்.

(ஐ-12)



விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தினருக்கும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

# அரசமைப்பு சபைக்கு உரியவர்களை நியமிக்க உத்தரவிடக் கோரி வழக்கு

கொழும்பு, பெப். 11

அரசமைப்புச் சபையில் வெற்றிடமாக இருக்கும் ஆறு உறுப்பினர் பதவிகளுக்கு உரியவர்களை நியமிக்க சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு உத்தரவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஆசிய சட்ட மனிதவள நிலையத்தின் சார்பில் அதன் சட்ட ஆலோசகரும், முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியுமான, சமித் சில்வா மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கிறார்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியற் கட்சிகளின் தலைவர்கள், பொலீஸ்மா அதிபர், சட்டமா அதிபர் உட்பட 86 பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

இதேவேளை, இதே விடயத்தை வலியுறுத்தி ஜயந்தி தந்தெனிய என்ற சமூக ஆர்வலரும் நேற்றையதினம் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

(ஐ-க)

## மதிய உணவில் நஞ்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய பலருக்கு உடற்சோர்வு ஏற்பட்டது. உணவு உட்கொண்ட அனைவரும் உடனடியாக யாழ்.மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர்.

மதிய உணவு சமைத்தபோது கறையானுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு வகை நஞ்சுப் பவுடர் சமையலில் கலந்துள்ளது என்று கூறப் படுகிறது. கடுகுபோன்று குறுணலாக காணப் படும் இந்த விவசாய உயிரியல் நச்சுப் பொருளை கடுகு என்று எண்ணி சமையலில் சேர்த்ததனாலேயே உணவு நஞ்சடைந்தது என்று கூறப்பட்டது.

ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட 20 பேரின் பெயர் விவரம் வருமாறு: -

எஸ்.மகாதேவி (வயது 45 - கோண்டாவில்), எஸ்.சிவபாக்கியம்(வயது 62), எஸ். பிரேமகிரி(வயது 16 - கோண்டாவில்), பி.விமலா(56 - சுண்டுக்குழி), கே.சுசிலா தேவி (வயது 49 - சுண்டுக்குழி), எ.துரையம்மா (வயது 57- கச்சேரியடி), எஸ்.கலாராணி (வயது 46-கச்சேரியடி), எஸ்.தேவச்சந்திரன் (வயது 48 - கோண்டாவில் மேற்கு), எ.சரஸ்வதி(வயது 75), ரி.சுபாஸ்கரன்(வயது 26 - கோண்டாவில்), எஸ்.பாலரூபா(வயது 26- கோண்டவில்), என்.மகேஸ்வரி(வயது65- கச்சேரியடி), ஆர்.அபிசாந்(வயது 6 - நல்லூர்), ஆர்.கந்தையா(வயது 90 - கச்சேரியடி), ஆர்.சோமிலா(வயது 14 - கோண்டாவில்), ரி.பரமேஸ்வரி(வயது 36 - கோண்டாவில்), இ.அப்புத்துரை(வயது 62 - கச்சேரியடி), விதுசன்(வயது11-கோண்டாவில்). (ஐ-14-139)

## கடத்தப்பட்ட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து நேற்றுமுன்தினம் கடத்தல்காரர்கள் வடிவேல் ஆனந்தனை வீட்டாருடன் தொலைபேசியில் உரையாட அனுமதி வழங்கினர். இரண்டு நிமிட நேரத் தொலைபேசி உரையாடலின் பின்னர் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

இதன்போதே கடத்தல்காரர்கள் 2 கோடி ரூபா கப்பம் கோரியுள்ளதுடன், இது குறித்தான விவரங்களை பொலீஸாருக்குத் தெரிவிக்கக்கூடாதென்றும் பணித்திருக்கின்றனர். வெள்ளவத்தைப் பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.(ஐ-க)

## முஸ்லிம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும், இந்தச் சூட்டுக்கு ரி-56 ரக துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாணப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் நிஹால் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே வன்முறைகளைத் தூண்டும் தீய சக்திகளே இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருப்பதாக பிரதேச வாசிகள் கருதுகின்றனர். (ஐ-க)

## வர்த்தகரைக் கடத்தியோரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தப்பட்டமை குறித்தான விசாரணைகள் பற்றிக் கேட்டபோதே பிரதிப்பொலீஸ்மா அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கடத்தல் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்தும் பொறுப்பை வெள்ளவத்தைப் பகுதிக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரிடம் ஒப்படைத்திருக்கிறேன். எப்படி விசாரணைகளை முன்னெடுப்பது என்பது பற்றி விரிவான விளக்கங்களையும் வழங்கியிருக்கிறேன். உண்மையில் இந்தச் சம்பவத்தை நோக்கும்போது அந்தப் பகுதியில் பாதுகாப்புக் குறைபாடு இருந்திருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இரண்டு வான்களில் வந்த குழுவினர் பலாத்காரமாக ஒருவரைத் தூக்கிக்கொண்டு சென்றவுடன், உடனடியாகவே தேடுதல்களை நடத்தியிருக்கவேண்டும். வானின் இலக்கங்கள், அவை சென்றபாதை என்பன பற்றி உடனடியாகத் தேடியிருக்கவேண்டும். இதை நான் பொலீஸாரிடம் சுட்டிக்காட்டினேன். பாதுகாப்பில் இவ்வாறான குறைகளை நாம் விடமுடியாது. மக்களைப் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பு. இப்போது நாம் இதுதொடர்பில் முழு அளவிலான விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம்.

- இவ்வாறு கூறினார் கொழும்பு மாவட்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர்.

(ஐ-க)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்குள்ள மக்களின் பிரச்சினைகளை அச்சொட்டாக எடுத்துக் கூறமுடியுமென்றும் தெரிவிக்கப்பட்டதையடுத்து, சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா மேற்படி பொறுப்பிலிருந்து விலகியிருக்கிறார்.

இந்த விலகல் தொடர்பான தீர்மானத்தை பாயிஸ் முஸ்தபா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாகவே எடுத்துக்கூறி விட்டார். பாயிஸ் முஸ்தபாவின் அந்த வெற்றிடத்துக்கு யாரை நியமிக்கலாம் என்பது பற்றி அரச உயர்மட்டம் நேற்று மந்திராலோசனை நடத்தியிருக்கிறது. இதன்படி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அமைச்சர் பேரியல் அஷ்ரப் அரச குழுவில் உள்ளடக்கப்படக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விவகாரத்தில் தமக்கும் முழு அதிகாரம் உண்டெனவும் உறுதியாகத் தெரிவித்தாராம். இதனால், இருவரிடையேயான பிரச்சினை தீவிரமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமது பாதுகாப்பு அதிகரிக்கப்படவேண்டுமென இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதி, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் தலைமைப் பொறுப்பைத் தமக்கே வழங்கவேண்டுமென்றும் கோரியுள்ளார்.

ஆனாலும், பாதுகாப்பு விவகாரத்தில் உடன்பாட்டை வெளியிட்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத் தலைமைப் பொறுப்புத் தொடர்பில் உடனடியாகப் பதில் எதனையும் கூறவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

மிகச் சூடான வார்த்தைப் பிரயோகங்களுக்கு மத்தியில் இடம்பெற்ற இந்தப்பேச்சுகளில் ஏற்பட்ட தாமதத்தினால் அன்றைய தின அமைச்சரவைக் கூட்டமும் தாமதமாகவே ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

## படுக்கையில் வைத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட வீட்டில் இவரும் கணவரும் மட்டுமே தங்கி இருந்தனர் என்று கூறப்படுகிறது. எட்டு வயதேயான இவர்களது மகள் ஒருத்தி தனது பேர்த்தியார் வீட்டில் வசித்து வந்தார்.

நேற்றுக் காலை உறவினர்கள் வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோது பிரஸ்தாப பெண் தரையில் படுக்கைப் பாயிலேயே சடலமாகக் காணப்பட்டார். தலையின் பின் பகுதி வெட்டுக்காயங்களால் சிதைந்து காணப்பட்டது.

உடனடியாக அங்கு திரண்ட உறவினர்களும் இளைஞர்களும் பெண்ணின் கணவரான சிவசீலன் என்பவரைத் தேடிப் பிடித்து நையப்புடைத்தனர். தனது மனைவியை தானே கொன்றதாக அப்போது அவர் ஒப்புக்கொண்டார் என்று கூறப்படுகிறது. பின்னர் அவர் கோப்பாய் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்றுப் பிற்பகல் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். உறவினர்களின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தார். அதன்பின்னர் பெண்ணின்சடலம் கோப்பாய் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டது.

(ஐ-7-86-49)

## வெலிகந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் வெலிகந்த பகுதிக்கு வர முற்பட்டால் கண்காணிப்புக் குழுவின் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அந்தத் தொலைபேசி எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் ஒட்டுப்படை முகாம் ஒன்றின் அருகே அமைந்திருக்கும் கண்காணிப்புக் குழு அலுவலக வளாகத்தில் அண்மையில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றதும் தெரிந்ததே. (ஐ-12)

Just
Change your life
with AIM(S)
Wait! Tomorrow
(46811)

## மரண அறிவித்தல்

### சோமசேகரம் சிவபாக்கியம்

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசேகரம் சிவபாக்கியம் அவர்கள் 08.02.2006 அன்று காலமானார்.

அன்னார் சோமசேகரத்தின் அன்பு மனைவியும் நித்தியலட்சுமி (அமரர்-மிதுலா), பாலசுப்பிரமணியம், பாஸ்கரன், சியாமிளா ஆகியோரின் பாசமிகு தாயும், செல்லம்மா (அமரர்), சின்னத்தம்பி (அமரர்), மயில்வாகனம் (அமரர்), இராசதுரை, புனிதவதி ஆகியோரின் சகோதரியும், சவுந்தலாதேவி, மாணிக்கராணி, மனோகரன் ஆகியோரின் மாமியும் திவ்யா, திவாகர், மிதுலன், மிதுசியா ஆகியோரின் பேர்த்தியும் முத்தையா, நடேசபிள்ளை அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு நீர்கொழும்பு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

(46815) தகவல்: சியாமளா *(பிரான்ஸ்).*

★நாவலர் வெளியீடு ★★★ NAVALAR PUBLICATION
முதலாம் நடுத்தவணைப் பயிற்சிப் பரீட்சை
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம் 15.02.06 (புதன்) முதல் 19.02.06 (ஞாயிறு) வரை நடைபெறும்.
★ வெளி மாணவர்களும் பரீட்சை எழுதலாம்.
★ வினாத்தாள் பெறவிரும்பும் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள் 12.02.2006இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.
★ பரீட்சைக்குப் பின் வினாத்தாள்களை பிரபல புத்தக சாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : நாவலர் இன்ஸ்ரிரியூட்
P.h. No. 222 8068 ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

COMPUTER PROGRAMMING

| Subjects | Duration | Fees | |
|---|---|---|---|
| | | Group | Personal |
| Java | 30 Hours | 3000.00 | 5000.00 |
| V.B Net | 30 Hours | 3000.00 | 5000.00 |
| C++ | 30 Hours | 3000.00 | 5000.00 |
| C | 30 Hours | 3000.00 | 5000.00 |

Batch Start on 13.02.2006
Group Class Only 5 Students
High Professional Lecturers
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil

வெளிவந்து விட்டது
S.L.E.A.S
கிரகித்தல், கல்வி, விடய ஆய்வு
4 வருட மாதிரி வினாத்தாள்
கிடைக்கும் இடங்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்., நீர்வ் கல்வி நிறுவனம், இணுவில்.

பிற்போடப்பட்டுள்ளது
இன்று நடைபெறவிருந்த "SAAMSTECH" இன் இலவச வகுப்புகள் தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறமாட்டாது. மறு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
"SAAMSTECH"
233/4, Kasthuriar Road, Jaffna.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது புணிமனையில் 11.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org